DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

தமது நற்சேவையினால் தமிழ் மக்களின் உள்ளங்களை வென்றி கொண்ட வீடு விற்பனை முகவர்கள்
Siva & Joy Real Estate Team
416-267-9700
Siva Shanmuganathan Broker
Homelife/Future Reality Inc., Brokerage
Joy H. Selvanayagam Broker

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative
kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com
Ragu Thillainathan Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999
RE/MAX

25வது ஆண்டை நோக்கி
Towards 25th Year in Publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
தித்திக்கும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
$1.00
Tel : 416-752-1524
Fax: 416-752-6703

Residential & Commercial Real Estate Services
என்னை அழையுங்கள்
பாலா லோகன்
647-447-1562
Bala Logendralingam
RE/MAX

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Family sponsorship;
Super visa for parents and grandparents including health insurance;
Citizenship;
Permanent resident card renewal;
Affidavits for immigration purposes;
More than 10 Years experience in the field of Canadian Immigration
Kokulan Baskaran
Tel : 647-344-6600

KANAGAAMBIKAI PAWN BROKERS
கனகாம்பிகை தங்கநகை அடகுமாடம்
2613 Eglinton Ave, East, Scarborough, ON M1K 2S2, Canada
416 269 7198

MORTGAGE
மோட்கேஜ்
NESAN
416-908-5656
SUBRA
subra.com
solutions@subra.com
Toll: 1-844-878-2721 | Fax: 647-351-3099

உதயம் 1265 | CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM | Friday July 3, 2020


## உலக நாடுகளில் கொரோனா நோயினால் பீடிக்கப்பட்டுள்ளவர்களின் தொகை நேற்று 10,984,897 ஆக உயர்ந்தது...

## உலகெங்கும் கொரோனாவினால் இறந்தவர்களின் எண்ணிக்கை 525,011 ஆக அதிகரித்துள்ளது...

## இலங்கையில் மரணமடைந்தவர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு இல்லை

## அமெரிக்காவில் 'கொரோனா' விற்கு பலியானவர்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரிப்பு. மொத்த இறப்பு 132,085 ஆக உயர்ந்துள்ளது...

கடந்த பல வாரங்களாக, உலக மக்கள் அனைவரையும் நடுங்கச் செய்யும் கொரோனா வைரஸ் நேற்று வியாழக்கிழமை 11ம் திகதி மாலை வரை பலிகொண்ட மக்களின் எண்ணிக்கை நாடுகள் வாரியாக தரப்படுகின்றன. அமெரிக்கா: 132,085 இத்தாலி: 34902 கனடா: 8657 இங்கிலாந்து: 43,984
ஸ்பெயின்: 28,371 ஜேர்மனி: 9,092 சீனா: 4659 பிரான்ஸ்: 29,892 ஈரான் 11,201
இந்தியா: 18421 இலங்கை: 11 பெல்ஜியம்: 9772 பிரேசில்: 62,021 ரஸ்யா:- 9742





## புலம்பெயர் மக்களது முதலீடுகளுக்கு பாதுகாப்பும் சலுகைகளும் வழங்குவோம் என்கிறார் இலங்கைப் பிரதமர் மஹிந்த

வடக்கிலே அபிவிருத்தி நடவடிக்கைகள் ஊக்குவிக்கப்பட வேண்டும். இதன் பொருட்டு புலம்பெயர் நாடுகளிலிருந்தும் முதலீட்டாளர்கள் இங்கு வருவார்களேயானால், அவர்களுக்கு உரிய பாதுகாப்பும் சலுகைகளும் வழங்கப்படும் என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ச கூறினார். அங்கிருந்து வரும் முதலீட்டாளர்கள் வடக்கு பகுதிக்குச் செல்லாது கொழும்பிலேயே தங்கி விடுகின்றனர் என்றும் குறிப்பிட்டார்.

கடந்த 5 வருட காலத்தைப் பின்னோக்கிப் பார்த்தால் வடக்கில் எந்தவொரு அபிவிருத்தியும் மேற்கொள்ளப்படவில்லை. தெற்கிலும் அதே நிலைமை தான் என்று கூறிய பிரதமர், இதற்குக் காரணம் முன்னைய அரசும் அவர்களுடன் சேர்ந்து இயங்கிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் தான் என்றும் குற்றம் சாட்டினார்.

நாட்டு அபிவிருத்தி மற்றும் மக்கள் வாழ்க்கையை மேம்படுத்தும் திட்டங்களின் போது வடக்கு மற்றும் தெற்கு என்ற பேதம் இல்லை எனவும் பிரதமர் தெரிவித்துள்ளார்.நேற்று முன்தினம் காலை அலரி மாளிகையில் தமிழ் ஊடகவியலாளர்களை சந்தித்த பிரதமர், அக் கலந்துரையாடலிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வடக்கு  கிழக்கு மாகாணங்களில் 1977ஆம் ஆண்டின் பின்னர், 2005-2010ஆம் ஆண்டுகளில் தங்கள் அரசாங்கம் ஆட்சியில் இருந்த போது பாரிய அபிவிருத்தி திட்டங்கள் பல மேற்கொள்ளப்பட்டன. அந்த மாகாணங்களில் மக்களின் வாழ்க்கையை சிறந்த நிலைக்கு கொண்டு வரும் திட்டங்களுடன் அரசாங்கம் செயற்பட்டதாகவும் கூறினார்.

அத்துடன், வடக்கு மக்களின் உண்மையான பிரச்சினைகள் தொடர்பில் அரசாங்கத்திற்கு தெரியப்படுத்துவது ஊடகவியலாளர்களின் பொறுப்பாகும் என பிரதமர் சுட்டிக்காட்டியுள்ளார்.

MONEY PROBLEMS?
உங்கள் அனைத்து கடன்களுக்குரிய கட்டணங்களை ஒரே சிறிய கட்டணமாக் எவ்வித வட்டியுமின்றிச் செலுத்த எம்மை நாடுங்கள்.
Direct Tamil Line Visit
(416) 489-2000 GtaCredit.Com
North York * Scarborough * Mississauga * Brampton * Ajax

ANUJA KUMARASAMY
647-267-7482
RE/MAX

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
✓ Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301 , 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

வீடு வாங்க விற்க...
மோகன் சுப்பிரமணியம்
Broker of Record / President
Direct Line: 416-321-2300 Office: 416-291-3000
6888 14th Avenue, Markham ON Independently owned and operated
PROPERTY MAX Realty Inc. Brokerage

# MORTGAGE SOLUTIONS

SAVE UPTO **75%** REFINANCE

## MONTHLY SAVING $2,409

| | | Before | After |
|---|---|---|---|
| Mortgage Payment | $320,000 @ 2.90% | $1,498.02 | - |
| Auto Loan | $21,000 @ 7.50% | $764.25 | $0.00 |
| Line of Credit - 1 | $16,000 @ 6.50% | $566.67 | $0.00 |
| Line of Credit -2 | $12,500 @ 7.00% | $447.92 | $0.00 |
| Credit Card -1 | $ 8,800 @12.00% | $352.00 | $0.00 |
| Credt Card - 2 | $ 5,200 @ 19.00% | $238.34 | $0.00 |
| Store Card | $ 3,000 @ 24.00% | $150.00 | $0.00 |
| New Mortgage | $386,500 @ 2.9% | | $1,605.00 |
| Total Debt | | $ 386,500.00 | $ 386,500.00 |
| Total Payment | | $4,014.20 | $1,524.55 |



mortgageSolutions.ca

Kiruba Thanabalasingham
Mortgage Agent Lic# M12002440

Cell: 416.894.9122
Fax: 647.317.1511
info@mortgageSolutions.ca
Ultimate Mortgage Group. Lic#11995

## Prime + 1% Lower Rate

## $50,000 EQUITY LOAN

GET APPROVED WITHIN 24 HOURS

416.298.2777

$375 Mo.

## MARKHAM & STEELES - BLUE BUILDING

B105 - 3341 Markham Road, Toronto, ON M1X 0A5

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் / Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Suganthy, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

4062 Ellesmere Rd, Scarborough, ON, M1C 1J2,
Phone: 416 752 1524, Fax: 416 752 6703
Email: uthayannews@yahoo.com Website: www.uthayannews.ca

உதயன் கதிரோட்டம்

# கொரோனா தொற்று விடயத்தில் உலகம் கவனயீனமாக செயற்படுகின்றதா?

கொரோனா தொற்று விடயத்தில் உலகம் கவனயீனமாக செயற்படுகின்றதா? என்ற கேள்வியை கனடாவின் பல்கலைக் கழகமொன்றி மருத்துவ பீடத்தின் தலைவர் எழுப்பியிருப்பது அனைவரினதும் கவனத்தை ஈர்க்க வேண்டிய ஒன்றாகும் இந்த விடயத்தில் சுகாதார அறிவுறுத்தல்களை பின்பற்ற வேண்டியது மிக முக்கியமானதாகும். உலக சுகாதார அமைப்பு என்பது கூட இந்த விடயத்தில் முன்னையதைப் போன்று இலலாமல் தனது செயற்பாடுகளைக் குறைத்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

கனடாவிலும் பல மாகாணங்களில் கொரோனாவின் பாதிப்பு மிகவும் மோசமடைவதைக் காணக் கூடியதாக இருக்கின்றது

சுகாதாரமான, பாதுகாப்பான பொதுப் போக்குவரத்தின் தேவை உணரப்பட வேண்டிய ஒன்றாகும். இதனை உறுதிப்படுத்த வேண்டிய கடப்பாட்டை அரசாங்கம் கொண்டிருக்கின்றது. பொதுப் போக்குவரத்தை முன்னெடுப்பவர்கள் பயணிகளின் பாதுகாப்புக்காக கட்டுப்பாடுகளை உறுதிப்படுத்தத் தவறுமிடத்து கடுமையான நடவடிக்கை எடுக்க தவறக் கூடாது. கொரோனா தொற்று கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ள நிலையில், பொதுப்போக்குவரத்து திறந்து விடப்பட்டுள்ளது. ஆனால் பயணக் கட்டுப்பாட்டு விதிகள் பேணப்படுவது திருப்தி அளிப்பதாக இல்லை என்றும் குற்றஞ்சாட்டப்படுகின்றது

கனடாவில் ஒன்றாரியோ மாகாண அரசின் சிரத்தையான முயற்சிகள் வெற்றியளித்தாலும் மக்கள் ஒத்துழைப்பதாகத் தெரியவில்லை என்றும் அந்த மருத்துவப் பீடத்தின் தலைவர் குறிப்பிட்டுள்ளார். கனடாவில் மத்திய மற்றும் அனைத்து மாகாணங்களினதும் நகர சபைகளினதும் மருத்துவ அதிகாரிகள் தங்களால் முயன்று எடுத்த முயற்சிகள் மக்கள் கவனயீனமாக உள்ளதால் அவை வெற்றியளிக்கவில்லை என்றும் அறியயமாக எமது கனடிய மக்கள் தங்கள் அன்பான முதியவர்களை இழந்து வருகின்றார்கள் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். எனவே உலகம் எப்படி தன்னை பாதுகாத்துக்கொள்ளப் போகின்றது என்பதை பொறுத்திருந்து பார்க்க முடியாது என்றும் அவசரமும் அவசியமுமான செயற்பாடுகள் அவசியம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளதை நாமும் எமது வாசக அன்பர்களோடு பகிர்ந்து கொள்கின்றோம்.

## யாழ் மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர் பவதாரணி ராஜசிங்கத்திற்கு ஆதரவை வழங்குமாறு வேண்டுகோள் விடுக்கும் கனடா வாழ் நண்பிகள்



ஆகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள இலங்கைப் பொதுத் தேர்தலில் யாழ் மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர் பவதாரணி ராஜசிங்கம் அவர்களுக்கு ஆதரவை வழங்குமாறு கேட்கும் கனடா வாழ் நண்பிகள் பலர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இலங்கை சுதந்திரக் கட்சியின் வேட்பாளராகப் போட்டியிடும் இவரது சின்னம் 'கை', மற்றும் இவருக்குரிய இலக்கம் 6 ஆகும். வேட்பாளர் பவதாரணி ராஜசிங்கம் ஒரு சிறந்த சேவையாளர் எனவும் பல தகமைகளைக் கொண்ட இவரை தேர்ந்தெடுப்பதன் மூலம் யாழ்ப்பாண மாவட்டத்தில் பல அபிவிருத்திப் பணிகளை நிறைவேற்ற முடியும் என்றும், வேலையற்ற இளைஞர் யுவதிகளுக்கு வேலை வாய்ப்புக்களைப் பெற்றுத் தர இவர் உதவியாக இருப்பார் என்றும் கனடாவில் வாழும் நண்பிகள் தெரிவிக்கின்றனர். (எமது அலுவலகச் செய்தியாளர்)

இலங்கையிலுள்ள உங்கள் உறவினர்களுக்கு சென்றடைய
நினைவஞ்சலி மற்றும் அந்தியேட்டி அழைப்பு விளம்பரங்கள் இலங்கையில் உள்ள பத்திரிகையில் பிரசுரிக்க எம்மை நாடுங்கள்...
நினைவஞ்சலி Posters மற்றும் அந்தியேட்டி அழைப்பு நூல் வடிவமைத்து அச்சிட்டு செய்துதரப்படும்...
+94 777-555026
6A, Perakumba Place, Wellawatte.

BASEMENT FOR RENT
Markham நகரில்
McCowan / 14th Ave.
சந்திப்பிற்கு அருகில் அமைந்துள்ள வீடொன்றில் இரண்டு அறைகள் கொண்ட basement உடனடியாக வாடகைக்கு உண்டு.
Separate entrance உள்ளது.
முழுமையான சமையல் பகுதி, மற்றும் washer, dryer அனைத்தும் உண்டு.
சிறிய ஒரு குடும்பம் விரும்பத்தக்கது.
ஒரு வாகனத் தரிப்பிடம் வழங்கலாம்.
வாடகை: $1,350 மட்டுமே.
Call: (416) 726-8403

முடி வெட்டுனர் தேவை (HAIR CUTTERS)
ஸ்காபுரோவில் அமைந்துள்ள பிரபல சலூன் ஒன்றுக்கு உடனடியாக ஆண், பெண் மடிவெட்டுனாகள் தேவைப்படுகின்றார்கள்.
அனுபவம் விரும்பத்தக்கது.
தகுந்த சம்பளம் வழங்கப்படும்.
Call: (647) 470-4615

வேலைக்கு ஆட்கள் தேவை
ஸ்காபுரோவில் அமைந்துள்ள நிறுவனம் ஒன்றுக்கு உடனடியாக வேலைக்கு ஆட்கள் தேவை.
ஆண், பெண் இருபாலரும் அமைக்கலாம்.
தகுந்த சம்பளம் வழங்கப்படும்.
Call: (416) 299-6742

பிள்ளை பராமரிப்பாளர் தேவை
ரொரன்ரோவில் வீடொன்றுக்கு வந்து இரட்டைக் குழந்தைகளை பராமரிப்பதற்கு, அன்பு செலுத்தக் கூடியவரும், பொறுமையோடு பணியாற்றக் கூடியவருமான ஒரு பெண்மணி தேவை.
சம்பளம் பேசித்தீர்க்கலாம்.
Call: (647) 763-5019

HAIR SALON FOR SALE
Brimley / Eglinton
Sale: - Equipment
- Tools
- Supplies
- Client List
21+Years in business.
650+ Regular Clients, Plus Walk-Ins
Call: (416) 768-8673
Email: Kumari_Madu@hotmail.com

## கரும்புலி மறவர்களை நினைவு கூர்ந்து பைரவி நுண்கலைக்கூடமும், கனேடிய தமிழ்க் கவிஞர்களும் இணைந்து வழங்கும் சிறப்பு நிகழ்வு உயிர்ப்பூ



கரும்புலி மறவர்களை நினைவு நாள் நாளை மறுநாள் 5ம் திகதியாகும். இந்த வீர மறவர்களை நினைவு கூர்ந்து பைரவி நுண்கலைக்கூடமும், கனேடியத் தமிழ்க் கவிஞர்களும் ஒன்றிணைந்து வழங்கும் சிறப்பு நிகழ்வான உயிர்ப்பூ கவியும் கானமும் தொலைக்காட்சி நிகழ்ச்சிக்காக நேற்று மாலை பைரவி ஒலிப்பதிவுக் கூடத்தில் ஒளிப்பதிவு மற்றும் ஒலிப்பதிவு பணிகள் இடம் பெற்றன. அனைத்து முயற்சிகளையும் பைரவி நுண்கலைக் கூடத்தின் அதிபர் திரு ஜெயச்சந்திரன் செய்திருந்தார்.

இந்த தொலைகாட்சி நிகழ்ச்சி ஈழத்தாய் (EET TV)தொலைக் காட்சியில் நாளையும் நாளை மறுநாளும் காட்சியளிக்கவுள்ளது கனேடியக் கவிஞர்களின் கவிதை நிகழ்வுடன் பைரவி இசையருவியின் இசையில் கனேடியப் பாடகர்களின் கரும்புலிகள் கானமும் ஒரு மேடையில் இடம்பெறும். இங்கே காணப்படும் படங்கள் நேற்று மாலை பைரவிநுண்கலைக் கூடத்தில் எடுக்கப்பட்டவையாகும்.

(படங்கள்:- சத்தியன்)

NEED HELP WITH YOUR TAXES? WE GOT YOU COVERED!!
உங்கள் வரித்தேவை, வியாபாரக் கணக்கு எதுவாயினும், திறமை, அனுபவம், தேர்ச்சி பெற்ற கணக்காளர்.
- Corporate Tax
- Personal Tax Planning
- Accounting
- Financial Statements
- Business Plan & Proposals
- For all your Business Needs



Call: 416 293 1616
416.438.9799
www.aricpa.ca · ari@aricpa.ca
MP Accounting & Finance Services Inc
1750 Brimley Road, Suite 213,
Toronto, ON. M1P 4X1
ARI A. ARIARAN CPA, CGA
Chartered Profressional Accountant

# இந்திய செய்தித்தாள்கள் மற்றும் செய்தி இணையதளங்களுக்கு சீனாவில் முழுத்தடை

இந்திய ஊடகம் மற்றும் வலைத்தளங்களை சீனா தடை செய்து உள்ளது இதற்கு இந்திய செய்திதாள் சங்கம் நடவடிக்கை எடுக்க மத்திய அரசை கேட்டு கொண்டுள்ளது.

நாட்டின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு சீன நிறுவனங்களை சேர்ந்த டிக்டாக் ஷேர்இட்இ வீ சேட் உள்ளிட்ட 59 செயலிகளுக்கு இந்திய மத்திய அரசு தடை விதித்தது.மத்திய அரசு விதித்த தடையின் எதிரொலியாக செல்போன்களில் ஏற்கனவே பதிவிறக்கம் செய்யப்பட்ட டிக் டாக் உள்ளிட்ட செயலிகள் முடக்கப்பட்டுள்ளன.

சீன செயலிகளை இந்திய மத்திய அரசு தடை செய்திருப்பது தொடர்பாக இந்தியாவுக்கான சீன தூதரகம் அறிக்கை வெளியிட்டுள்ளது. அதில் மத்திய அரசின் நடவடிக்கை இந்தியாவின் சந்தை போட்டிக்கும் நுகர்வோர் நலனுக்கும் உகந்ததல்ல என தெரிவிக்கப்பட்டுள்ளது.

- அமெரிக்க வெளியுறவு செயலாளர் மைக் பாம்பியோ ஆதரவளித்துள்ளார்

சீனாவின் மீதான இந்தியாவின் நடவடிக்கைக்கு அமெரிக்க வெளியுறவு செயலாளர் மைக் பாம்பியோ ஆதரவளித்துள்ளார்.

சீனா அனைத்து இந்திய செய்தித்தாள்கள் மற்றும் செய்தி இணையதளங்களை தடை செய்து உள்ளது. இதை தொடர்ந்து இந்திய செய்தித்தாள் சங்கம் (ஐஎன்எஸ்) ஒரு அறிக்கையை வெளியிட்டது. அதில் உறுப்பினர்கள் சார்பாக ஐ.என்.எஸ் தலைவர் ை'லே' குப்தாகூறி இருப்பதாவது:

இந்திய செய்தித்தாள்கள் மற்றும் ஊடக வலைத்தளங்களின் அணுகலை அரசாங்கத்தின் நடவடிக்கை கட்டுப்படுத்த முடியாது என்றும் தொழில்நுட்ப ரீதியாக மேம்பட்ட ∴பயர்வாலை உருவாக்குவதன் மூலம் விபிஎன் சேவையகம் வழியாக அணுகல் தடுக்கப்பட்டுள்ளது.

இந்திய அரசாங்கம் இந்தியாவில் சீன ஊடகங்களுக்கான அனைத்து வகையான அணுகல்களையும் தடைசெய்ய விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் இந்திய ஊடக நிறுவனங்களில் சீனர்கள் மேற்கொண்ட ஒத்துழைப்புகள் ∴ முதலீடுகளை உடனடியாக தடுத்து நிறுத்த வேண்டும் என்றும் வலியுறுத்தி உள்ளார்.

# இந்தியா குண்டுகளை வீச, சீனத்துச் சிப்பாய்கள் தற்காப்பில் ஈடுபட்டுள்ளனர் என்கின்றன சீன ஊடகங்கள்

லாடக் மோதலின் போது இந்தியா குண்டுகளை வீசுகிறது... சீன வீரர்கள் தற்காப்பில் ஈடுபட்டுள்ளனர் என சீன ஊடகங்கள் செய்திகள் வெளியிட்டுள்ளன.

லடாக்கின் கிழக்கு உள்ள கல்வான் பள்ளத்தாக்கு பகுதியில் அத்துமீறிய சீன ராணுவ வீரர்களுக்கும் இந்திய வீரர்களுக்கும் கடந்த மாதம் 15-ந் தேதி ஏற்பட்ட மோதலில் இந்திய தரப்பில் 20 பேர் மரணம் அடைந்தனர். சீன தரப்பில் 35 பேர் உயிர் இழந்தனர். ஆனால் சீன தரப்பில் உயிரிழப்பு விவரங்களை வெளியிடவில்லை.

தற்போது சீன நாளிதழ்களில் போர் குறித்த செய்திகள் அதிகம் இடம்பெற்றுள்ளன. கம்யூனிஸ்ட் கட்சியின் பீப்பிள் டெய்லி நாளிதழில் 3 பெரிய புகைப்படங்கள் பிரசுரம் செய்யப்பட்டுள்ளன.

இதில் லடாக் எல்லையில் பனி படர்ந்த குன்லுன்சன் மலைப் பகுதியில் 4 சீன வீரர்கள் செல்லும் புகைப்படம் பிரதானமாக இடம்பெற்றுள்ளது. தலைநகர் பெய்ஜிங்கில் இலையுதிர் காலம் தொடங்கியிருப்பதால் சூரியனின் ஒளி தங்க நிறத்தில் ஜொலிக்கிறது. கடைகளில் மக்கள் கூட்டம் அதிகமாக உள்ளது. பூங்காக்கள் பொது இடங்களில்சுற்றுலா பயணிகள் குவிந்துள்ளனர். ஆங்காங்கே அறிவிப்பு பலகைகளில் ஒட்டப்பட்டிருக்கும் நாளிதழ்களை படிப்பதில் மக்கள் அதிக ஆர்வம் காட்டுகின்றனர்.

தி நியூ சைனா நியூஸ் ஏஜென்ஸி யின் செய்தியில் கெசிலாங் பகுதியில் சீன எல்லைக்குள் இந்திய வீரர்கள் நுழைந்திருப்பதாகவும் அங்குள்ள சீன வீரர்கள் மீதுதாக்குதல்நடத்திவருவதாகவும்தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய வீரர்கள் பெருமளவில் வெடிகுண்டுகளை வீசி தாக்குதல் நடத்துகின்றனர். சீன வீரர்கள் தற்காப்புக்காக தாக்குதலில் ஈடுபட்டுள்ளனர் என்றும் அந்த செய்தி நிறுவனம்குறிப்பிட்டுள்ளது.

தி நியூ சைனா நியூஸ் ஏஜென்ஸி வெளியிட்டுள்ள செய்தியில் தீவிர சண்டைக்குப் பிறகு கிழக்கு எல்லையில் ஜுங்புதி சேகோபு கெனிங்னாய் ஜிதிங்பு தாங் நியாங்பா துரோகுங் பாலம் ஆகிய 7 நிலைகளை இந்தியாவிடம் இருந்து சீன ராணுவம் மீட்டிருக்கிறது.

கெசிலாங் நதிப் பகுதியில் இந்திய வீரர்கள் புதிதாக தாக்குதலை தொடங்கி உள்ளனர். சீன வீரர்கள் தற்காப்புக்காக தாக்குதல் நடத்தி வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இலங்கைத் தேர்தலில் போட்டியிடும் குடும்ப உறவுகள்

**- சிவா பரமேஸ்வரன்**

இலங்கை நாடாளுமன்றத்துக்கான தேர்தல் பல நிர்வாக மற்றும் சட்ட சிக்கல்களைக் கடந்து எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 5ஆம் திகதி நடைபெறவுள்ளது.

தேர்தல் பிரச்சாரம் இப்போது சூடுபிடிக்க ஆரம்பித்துள்ளது என்றாலும் கட்சிகள் எந்த வி'யங்களை முன்வைத்து மக்களிடம் வாக்கு கோரவுள்ளன என்பது தேர்தல் அறிக்கை வெளியான பிறகே தெரியும் ஆனாலும் நாட்டின் அரசியல் பெரும்பான்மை மற்றும் சிறுபான்மை என்று துருவப்படுத்தப்பட்டுள்ளது நன்றாகத் தெரிகிறது.

முன்னையத் தேர்தல்களைப் போலவே இம்முறையும் இலங்கையில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த பல உறுப்பினர்கள் வேட்பாளர்களாகக் களமிறங்கியுள்ளனர்.



இத்தேர்தலில் தந்தை-மகன், உடன்பிறப்புகள், கணவன்-மனைவி என அனைத்து குடும்ப உறவுகளும் வேட்பாளர்களாக களமிறக்கப்பட்டுள்ளனர். அப்படியானவர்களின் சிலரைப் பார்ப்போம்.

ராஜபக்ச குடும்பத்தில் மட்டும் இரு புதுமுகங்கள் உட்பட ஐந்து பேர் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் சார்பில் தாமரை மொட்டுச் சின்னத்தில் களமிறங்கியுள்ளனர்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ச குருநாகல் மாவட்டத்திலும், அவரது மகன் நாமல் ராஜபக்ச ஹம்பாந்தோட்டையிலும் போட்டியிடுகின்றனர். மஹிந்தவின் மூத்த சகோதரரும் அமைச்சருமான சாமல் ராஜபக்ச ஹம்பாந்தோட்டையிலும் அவரின் மகன் சசீந்திர ராஜபக்ச புதுமுகமாக மொனராகல மாவட்டத்திலும் களமிறங்க ராஜபக்சக்களின் சகோதரி மகன் நிபுண ரகவக்க மாத்தறை மாவட்டத்தில் மற்றொரு புதுமுகமாக களமிறங்கியுள்ளார்.

மஹிந்த ராஜபக்சவை தவிர ஏனைய நால்வரும் தமது பூர்விகமான தெற்கில் போட்டியிடுகின்றனர்.



சாமல்-நாமல் ஆகியோர் ஒரே மாவட்டத்தில் போட்டியிட்டாலும் அவர்களிடையே கூடுதலான விருப்பு வாக்குகளைப் பெறுவதில் போட்டியுள்ளது. 2015 தேர்தலில் பெரியப்பாவைவிட நாமல் கூடுதல் வாக்குகளைப் பெற்றிருந்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து பிரிந்து சஜித் பிரேமதாஸ தலைமையில் டெலிபோன் சின்னத்தில் ஐக்கிய மக்கள் சக்தியாகப் போட்டியிடும் கட்சியிலும் குடும்ப உறுப்பினர்களின் ஆதிக்கம் உள்ளது. கடந்த தேர்தல் போன்று, முன்னாள் அமைச்சரும் அக்கட்சியின் பேச்சாளருமான டாக்டர் ராஜித சேனாரட்ன களுத்துறையிலும் அவரது மகன் சதுர சேனாரட்ன கம்பஹா மாவட்டத்திலும் போட்டியிடுகின்றனர்.

இக்கட்சியின் சார்பில் மொனராகல மாவட்டத்தில் தர்மதாஸ பண்டார போட்டியிட அவரது சகோதரரும் கட்சியின் பொதுச் செயலருமான ரஞ்சித் மதும பண்டார தேசியப் பட்டியலில் இடம்பிடித்துள்ளார்.

ரணதுங்க சகோதரர்களிடையே கம்பஹாவில் நேரடிப் போட்டி நிலவுகிறது. உலகக் கோப்பையை வென்ற இலங்கை கிரிக்கெட் அணிக்குத் தலைவராக இருந்த அர்ஜுன ரணதுங்க கடந்த தேர்தலைப் போன்று ஐக்கிய தேசியக் கட்சியின் யானை சின்னத்திலும், பிரசன்ன ரணதுங்க தாமரை மொட்டுச் சின்னத்திலும் நேருக்கு நேர் போட்டியிடுகின்றனர்.

மலையகத்தில் தொண்டமான் குடும்பத்திலும் இதே நிலை கணப்படுகிறது. காலஞ்சென்ற ஆறுமுகன் தொண்டமானின் மகன் ஜீவன் தொண்டமான் நுவரெலியாவிலும், ஆறுமுகன் தொண்டமானின் சகோதரியின் மகன் செந்தில் தொண்டமான் பதுளை மாவட்டத்திலும் மொட்டுச் சின்னத்தில் களமிறக்கப்பட்டுள்ளனர்.

தமிழ் கட்சிகளும் இதற்கு விதிவிலக்கல்ல. வடமாகாண சபையின் முன்னாள் முதலமைச்சர் விக்னேஸ்வரனின் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் மீன் சின்னத்தில் முன்னாள் துணை அமைச்சர் சோ.கணேசமூர்த்தியும் அவரது மகன் கோபிநாத் கணேசமூர்த்தியும் ஒரே கட்சியில் மட்டக்களப்பில் போட்டியிடுகின்றனர்.

இதே கட்சியில் யாழ்ப்பாணத்தில் சுரேஷ் பிரேமச்சந்திரன் போட்டியிட அவரது சகோதரர் கந்தையா சர்வேஸ்வரன் தேசியப் பட்டியலில் இடம்பிடித்துள்ளார்.



தமிழ் முற்போக்குக் கூட்டணி தலைவர் மனோ கணேசன் கொழும்பில் தொலைபேசி சின்னத்தில் போட்டியிட, அவரது சகோதரர் பிரபா கணேசன் தொலைவிலிருக்கும் வன்னியில் ஜனநாயக இடதுசாரி முன்னணியின் சுவர்க்கடிகாரம் சின்னத்தில் இறங்கியிருக்கிறார்.

அகில இலங்கை தமிழர் மகாசபையின் சார்பில் கப்பல் சின்னத்தில் விநாயகமூர்த்தி முரளிதரன் (கருணா அம்மான்) அம்பாறை மாவட்டத்தில் போட்டியிடுகிறார். அவரது மனைவி வித்யாவதி முரளிதரன் மட்டக்களப்பில் சுயேச்சைக் குழுவொன்றின் சார்பில் தையல் இயந்திரம் சின்னத்தில் களமிறங்கியுள்ளார்.

திருகோணமலையில் காலஞ்சென்ற அமைச்சர் எம்.ஐ.எம் மக்ரூபின் மகனும் மகளும் போட்டியில் உள்ளனர். பாரம்பரியமாக இக்குடும்பம் ஐதேக சேர்ந்தவர்கள். ஆனால் கட்சி பிளவுபட்ட நிலையில் மகன் இம்ரான் மஹ்ரூப் டெலிபோன் சின்னத்திலும் மகள் ரோஹினா மஹ்ரூப் யானை சின்னத்திலும் எதிர் எதிராகப் நிற்கின்றனர்.

சென்ற நாடாளுமன்றத்தில் அங்கம் வகித்த தயா கமகே தம்பதிகள் இத்தேர்தலிலும் ஒரே கட்சியின் சார்பில் இரு மாவட்டங்களில் போட்டியிடுகின்றனர். தயா கமகே கொழும்பிலும், அவரது மனைவி அனோமா கமகே அம்பாறை மாவட்டத்திலும் யானை சின்னத்தில் வேட்பாளர்களாக உள்ளனர்.

தாமரை மொட்டு கட்சி சார்பில் சகோதரர்கள் லக்ஸ்மண் யாப்பா மற்றும் மஹிந்த யாப்பா மாத்தறை மாவட்டத்தில் வாக்கு கோருகின்றனர்.

பௌத்தர்களின் மிகப் புனிதத் தலமான தலதா மாளிகை அமைந்துள்ள கண்டி மாவட்டத்தில் மொட்டுச் சின்னத்தில் உடன்பிறவா சகோதரர்கள் மஹிந்தானந்த அளுத்கமகே மற்றும் ஆனந்த அளுத்கமகே தேர்தல் களத்திலுள்ளனர். 2015 தேர்தலில் எதிரும் புதிருமாகப் போட்டியிட்ட இவர்கள் இம்முறை ஒரே கட்சியில் இத்தேர்தலை சந்திகின்றனர்.

மாத்தளை மாவட்டத்திலும் அதே கட்சியின் சார்பில் முன்னாள் அமைச்சர் ஜானக பண்டார தென்னகோன் மற்றும் அவரது மகன் பிரேமித பண்டார தென்னகோனும் போட்டியிடுகின்றனர்.

அம்மாவட்டத்தில் யானை கட்சியின் சார்பில் அளுவிகாரே குடும்பத்தில் வழமைபோல் சகோதரர்கள் வசந்த அளுவிகாரே மற்றும் ரஞ்சித் அளுவிகாரே இம்முறையும் போட்டியிடுகின்றனர்.

நுவரெலியாவில் நவீன் திஸநாயக்க இம்முறையும் யானையில் பயணிக்கிறார். அவரது சகோதாரர் மாயந்த யஷ்வந்த் திசாநாயக்கவுக்கு டெலிபோன் கட்சியின் தேசியப் பட்டியலில் இடமளிக்கப்பட்டுள்ளது.

ரணில் விக்ரமசிங்கவின் குடும்ப உறுப்பினராரும் கட்சித் தலைவர் பதவியை குறிவைத்துள்ளவர்களில் ஒருவரான ருவான் விஜேவர்த்தன கம்பஹாவில் யானயில் போட்டியிடுகிறார்.

இந்தத் தேர்தலில் குடும்ப உறவுகள் ஒரே கட்சியில் மட்டுமல்லாமல் எதிரெதிராகவும் மோதுகிறார்கள். எதிர்த்துப் போட்டியிடும் போதும் சின்னத்துக்கு வாக்கு சேகரிப்பதே பிரதான இலக்காக உள்ளது. ஆனால் ஒரே கட்சியில் போட்டியிடும் போது சின்னத்துக்கு வாக்கு சேகரிக்கும் அதேவேளை விருப்பு வாக்குகளைப் பெறுவதில்தால் உண்மையான போட்டி நிலவுகிறது.

# மகிந்தவின் தூண்டுதலால் சஜித் பிரேமதாசவிற்கு எதிராக “போர்கொடி” உயர்த்தும் கருணா

**25 கோடிக்கு மேல் பணமும் ஆயுதங்களும் விடுதலைப் புலிகளுக்கு தந்தவர் சஜித்தின் தந்தையே என்றும் “போடுகின்றார்” கருணா அம்மான்.**



சஜித்தின் தந்தையே 5000 துப்பாக்கிகள் தந்து 5000 கிரனேட்டுகளும் தந்து ஒரு கோடி தோட்டாக்களும் தந்து 25 கோடிக்கு மேல் பணமும் தந்து விடுதலைப்புலிகளை வளர்த்தது விட்டவர் என தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணியின் தலைவரும் அம்பாறை மாவட்ட தலைமை வேட்பாளருமான விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்தார்.

பிள்ளையானை குழிதோண்டி புதைக்க வேண்டும் என்பதற்காகவே தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியில் வேட்பாளர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அக்கட்சியில் உழைத்தவர்களை வேட்பாளராக நியமித்திருந்தால்அக்கட்சியில்பிள்ளையான்வெற்றி பெற்றிருப்பார் எனவும் முரளிதரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணியின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரிக்கும் வகையிலான பொதுக்கூட்டம் களுவாஞ்சிகுடியில் நேற்று நடைபெற்றது.

தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணியின் வேட்பாளர் த. வரதராஜா தலைமையில் நடைபெற்ற இந்த கூட்டத்தில் தலைமை வேட்பாளர் திருமதி வித்தியாபதி முரளிதரன் கட்சியின் செயலாளரும் வேட்பாளருமான வி.கமலதாஸ் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது தொடர்ந்து உரையாற்றிய அவர் அண்மையில் 30 வி-
னாடி
காணொளி அணுகுண்டு வெடித்தது போன்று இருந்தது. எங்கும் கருணா அம்மானின் செய்தியே காணப்பட்டது. நான் அங்கு ஒரு மணித்தியாலமாக பேசினேன். பொதுவாக யுத்ததில் ஏற்பட்ட இழப்புகள் தொடர்பில் பேசினேன். மீண்டும் ஒரு இழப்பு தேவையில்லையென்று பேசினேன். அதனை சஜித் பிரேமதாச எடிட்டிங் செய்து அவரே வெளியிட்டார். அவரின் தலையில் அவரே மண்ணை அள்ளிப்போட்டுக் கொண்டார்.

சஜித்தின் தந்தையே 5000 துப்பாக்கிகள் தந்து 5000 கிரனேட்டுகளும் தந்து ஒரு கோடி தோட்டாக்களும் தந்து 25 கோடிக்கு மேல் பணமும் தந்து விடுதலைப்புலிகளை வளர்த்தது உங்கள் தந்தையென்று அவரிடம் கூறியுள்ளேன்.

இன்று சிங்கள மக்கள் மத்தியில் செல்ல முடியாத நிலை சஜித்திற்கு ஏற்பட்டுள்ளது. என்னை சுரண்டினால் பிரச்சினை அவருக்குத்தான் என்பது அவருக்கு விளங்கிவிட்டது.

அதற்குத்தான் பிரதமர் கூறினார் கருணா கருணா என்று கத்தாமல் வாயை பொத்திட்டு இருங்கள் என்று கூறிவிட்டார் பிரதமர்.

முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் சிவாஜிலிங்கம் மட்டக்களப்புக்கு வரும்போது இங்குள்ள மக்கள் அவருக்கு ஈக்கு கட்டினால் அடிக்கவேண்டும். இவர்தான் சொல்லின் செல்வன் என மட்டக்களப்பு மக்களால் போற்றப்பட்ட இராஜதுரை எம்பியை வடக்கில் துரத்தியடித்தவராகும்.

அம்பாறை மாவட்டத்தில் கோடிஸ்வரன் காடு முழுவதையும் அழித்துவிட்டார். கஞ்சிகுடிச்சாறு பகுதியில் கள்ளமரம் ஏத்தி அழித்துவிட்டார். மண் விற்பனை செய்ற ஒப்பந்த வேலைகளை செய்கின்றவர்கள் அங்கு தேவையில்லை.

தமிழ் தேசிய கூட்டமைப்பினை உருவாக்கியதே நான்தான். யுத்தம் நடக்கின்றது இந்த யுத்தம் வெளியுலகுக்கு தெரியப்படுத்த வேண்டும். யுத்தத்தின் இழப்புகள் பாதிப்புகள் தொடர்பில் பாராளுமன்றத்தில் ஒலிக்க வேண்டும் என்று சிரேஸ்ட ஊடகவியலாளர் சிவராம் எனக்கு ஆலோசனை வழங்கினார்.

இதனை நான் தலைவரிடம் சென்று கூறினேன். நான் சுடச் சொன்னவர்களையெல்லாம் என்னிடம் கொண்டு வருகின்றாயா என்று என்னிடம் கேட்டார் என்றார்.


MONEY PROBLEMS?™
ஓர் சிறிய தொகையை மாதாந்தம் செலுத்துவதன் மூலம் உங்கள் கடனில் இருந்து விடுதலை பெறலாம்

உங்களைக் கேளுங்கள்?

- நீங்கள் எப்பொழுதும் உங்கள் வங்கி தருகின்ற OVER DRAFT ஐ உபயோகிக்கின்றீர்களா?
- கடன் கொடுத்தவர்களால் உங்கள் வீட்டிற்கு அல்லது வேலைத்தளத்திற்கு தொலைபேசி அச்சுறுத்தல் அல்லது தொந்தரவு செய்வதுண்டா?
- வாடகை, மோட்கேஜ், வாகனங்களுக்கான கட்டணங்களை செலுத்துவதில் சிரமப்படுகின்றீர்களா?
- நிதிப்பிரச்சனை உங்கள் திருமணத்தையோ அல்லது உடல் நலத்தையோ பாதிக்கின்றதா?
- CREDIT RATING உங்கள் எதிர்காலத்தைப் பாதிக்கின்றதா?
- உங்கள் கார், வீடு, RRSP, பங்குகள் மற்றும் ஏனைய சொத்துக்களை இழந்துவிடுவோம் என அஞ்சுகின்றீர்களா?
- உங்களுக்கு எதிராக நீதிமன்ற கட்டளைகள் உண்டா?
- உங்களுக்கு CRA உடன் தனிப்பட்ட வருமானவரிகள் அல்லது வேறு வரிகளினால் பிரச்சனைகள் உண்டா?



gta™ credit

மேற்குறிப்பிட்ட கேள்விகளுக்கான உங்கள் பதில் “ஆம்” என்று இருந்தால் நீங்கள் உடனடியாக எங்களோடு தொடர்பு கொண்டு தனிப்பட்ட பிரத்தியேக சந்திப்பொன்றை மேற்கொள்ள வேண்டும். உங்கள் சந்திப்பு எமது அலுவலகத்தில் உள்ள அரச அங்கீகாரம் பெற்ற ஆலோசகர் ஒருவரோடு இடம்பெறும்

Scarborough / Downtown Toronto: 416-489-2000
Mississauga / Brampton: 416-650-5400



| Scarborough | Toronto/Downtown | North York | Mississauga | Brampton |
|---|---|---|---|---|
| 201-4433 Sheppard Ave. E Scarborough, ON, M1S 1V3 | 800-120 Eglinton Ave. E Toronto, ON, M4P 1E2 | 306-1280 Finch Ave. W North York, ON, M3J 3K6 | 110-93 Dundas Street E. Mississauga, ON, L5A 1W7 | 201-7990 Kennedy Rd. South, Brampton, Ontario, L6W 0B3 |



Mark Shamly
Tamil Consultant

Proudly Served over 15,000 clients since 2004
Visit : GtaCredit.Com

Ajay Oberoi
Experienced Credit Counsellor

# சாத்தான்குளம் பெண் தலைமை காவலருக்கு 'வாட்ஸ் அப் காலில்' பேசி நம்பிக்கை ஊட்டிய நீதிபதிகள்

கோவில்பட்டி கிளைச் சிறையில் தந்தை, மகன் அடுத்தடுத்து உயிரிழந்த வழக்கில் கோவில்பட்டி நீதித்துறை நடுவரிடம் அச்சமின்றி சாட்சியளித்த சாத்தான்குளம் பெண் தலைமைக் காவலர் ரேவதியிடம் உயர் நீதிமன்ற நீதிபதிகள் நேரடியாக போனில் பேசி நம்பிக்கை ஊட்டினர்.சாத்தான்குளத்தைச் சேர்ந்த ஜெயராஜ், அவரது மகன் பென்னிக்ஸ். சாத்தான்குளம் போலீஸாரால் கைது செய்யப்பட்டு கோவில்பட்டி கிளைச் சிறையில் அடைக்கப்பட்ட இருவரும் அடுத்தடுத்து மர்மமான முறையில் இறந்தனர்.



இந்த வழக்கை உயர் நீதிமன்ற மதுரை கிளை தாமாக முன்வந்து விசாரித்து சிபிசிஜடி விசாரணைக்கு மாற்றியது. அடுத்த 24 மணி நேரத்தில் சிபிசிஜடி போலீஸார் சாத்தான்குளம் காவல் ஆய்வாளர் ஸ்ரீதர், உதவி ஆய்வாளர்கள் பாலகிருஷ்ணன், ரகுகணேஷ் மற்றும் தலைமை காவலர் முருகன், காவலர் முத்துராஜ் ஆகியோர் மீது கொலை வழக்கு பதிவு செய்தனர்.தொடர்ந்து ஸ்ரீதர், பாலகிருஷ்ணன், ரகு கணேஷ், முருகன் ஆகியோ கைதும் செய்தனர்.முன்னதாக இந்த வழக்கு தொடர்பாக உயர் நீதிமன்ற கிளை உத்தரவுபடி கோவில்பட்டி நீதித்துறை நடுவர் பாரதிதாசன் சாத்தான்குளம் கவல் நிலையத்திற்கு நேரில் சென்று விசாரித்தார்.

அப்போது அங்கிருந்த ஏடிஎஸ்பி, டிஎஸ்பி உள்ளிட்ட போலீஸார் நீதித்துறை நடுவரை மரியாதைக்குறைவாக நடத்தியுள்ளனர்.கேட்ட கேள்விகளுக்கு பதிலளிக்காமலும், ஆவணங்களை வழங்காமல் இழுத்தடித்தும் போலீஸார் அசாதாரண சூழ்நிலையை ஏற்படுத்தியதாகவும், உடல் வலிமையை காட்டி மிரட்டியதாகவும் நீதித்துறை நடுவர் உயர் நீதிமன்றக் கிளை பதிவாளருக்கு அனுப்பிய அறிக்கையில் கூறியிருந்தார்.நீதித்துறை நடுவரிடம் சாத்தான்குளம் காவல் நிலைய பெண் தலைமை காவலர் ரேவதி மட்டும் துனிச்சலுடன் சாட்சியளித்துள்ளார். ஜெயராஜ், பென்னிக்ஸ் ஆகியோரை போலீஸார் விடிய விடிய லத்தியால் அடித்தாகவும், போலீஸாரின் லத்திக்கள் மற்றும் மேஜையில் ரத்தக்கறை படிந்திருந்ததாகவும் அப்போது ரேவதி தெரிவித்தார்.மேலும், போலீஸாருக்கு எதிராக சாட்சியம் அளித்ததால் தனக்கு ஆபத்து ஏற்படும் அச்சம் உள்ளது.

எனவே பாதுகாப்பு வழங்க வேண்டும் என்றும் நீதித்துறை நடுவரிடம் கேட்டுக்கொண்டார்.இந்த வழக்கில் ரேவதியின் சாட்சியம் மிக முக்கியமானதாக கருதப்படுகிறது. சிபிசிஜடி போலீஸார் கொலை வழக்கு பதிந்து போலீஸாரை கைது செய்ய ரேவதியின் சாட்சியமும் முக்கியக் காரணம் எனக் கூறப்படுகிறது.இந்நிலையில் உயர் நீதிமன்ற கிளையில் இன்று சாத்தான்குளம் வழக்கு விசாரணைக்கு வந்தபோது, ரேவதிக்கு சம்பளத்துடன் கூடிய விடுப்பும், பாதுகாப்பும் வழங்க நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

இதையடுத்து சாத்தான்குளம் அருகேயுள்ள அறிவான்மொழி கிராமத்தில் உள்ள ரேவதியின் வீட்டுக்கு 24 மணி நேர போலீஸ் பாதுகாப்பு அளிக்கப்பட்டது.இந்த வழக்கு இன்று உயர் நீதிமன்றத்தில் வீடியோ கான்பரன்சில் விசாரிக்கப்பட்டது. விசாரணையின் போது யாரும் எதிர்பாராத வகையில் ரேவதியுடன் நீதிபதிகள் வாட்ஸ்அப் காலில் பேசினர். அப்போது அவருக்கு பாராட்டு தெரிவித்தும், தைரியம் மற்றும் நம்பிக்கையை ஊட்டும் வகையிலும் நீதிபதிகள் பேசினர்.நாடு முழுவதும் பரபரப்பாக பேசப்படும் வழக்கில் தைரியமாக சாட்சியளித்த பெண் தலைமை காவலருடன் நீதிபதிகள் போனில் தைரியம் ஊட்டிய நிகழ்வு முக்கியமானதாக கருதப்படுகிறது.

# என்எல்சி விபத்தில் பலியானோர் குடும்பத்துக்கு ரூ.30 லட்சம் நிவாரனம் வழங்கப்படும் : என்எல்சி நிர்வாகம் அறிவிப்பு

என்.எல்.சி. விபத்தில் பலியானோர் குடும்பத்தினருக்கு தலா 30 லட்சம் இழப்பீடு வழங்கப்படும் என என் எல் சி நிர்வாகம் தெரிவித்துள்ளது.

நெய்வேலி என்எல்சி இரண்டாவது அனல் மின் நிலையத்தின் 5வது யூனிட்டில் உள்ள பாய்லர் நேற்று காலை திடீரென வெடித்து தீப்பிடித்தது. இதில் 7 தொழிலாளர்கள் உயிரிழந்தனர். 16 பேர் பலத்த காயங்களுடன் மீட்கப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.



என்எல்சி அனல்மின் நிலைய விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு ரூ.3 லட்சம் நிவாரணம் வழங்க முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி உத்தரவிட்டுள்ளார். இந்த விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு மத்திய உள்துறை மந்திரி அமித் ஷா இரங்கல் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே, உள்துறை மந்திரி அமித்ஷா முதலமைச்சர் பழனிசாமியுடன் இன்று தொலைபேசியில் பேசினார். அப்போது என்.எல்.சி. விபத்தில் உயிரிழந்தோர் மற்றும் பாதிக்கப்பட்டோருக்கு மத்திய அரசு நிதியுதவி வழங்க வேண்டும் என கோரிக்கை விடுத்தார்.

இந்நிலையில், என்.எல்.சி. விபத்தில் பலியானோர் குடும்பத்தினருக்கு தலா 30 லட்சம் ரூபாய் இழப்பீடு வழங்கப்படும்.

மேலும், படுகாயம் அடைந்தோருக்கு இடைக்கால நிவாரணமாக 5 லட்சம் ரூபாய் இழப்பீடு வழங்கப்படும். உயிரிழந்தோர் குடும்பத்தில் ஒருவருக்கு நிரந்தர வேலை வழங்கப்படும் என என்.எல்.சி நிர்வாகம் தெரிவித்துள்ளது.

# சாத்தான்குளம் வழக்கில் போலீஸ் அதிகாரி கைது பட்டாசு வெடித்துக் கொண்டாடிய மக்கள்



சாத்தான்குளம் தந்தை, மகன் மரணம் தொடர்பான வழக்கில் போலீஸ் அதிகாரி கைது செய்யப்பட்டதை, அப்பகுதியைச் சேர்ந்தவர்கள் பட்டாசு வெடித்து வரவேற்றனர். சாத்தான்குளத்தை சேர்ந்த ஜெயராஜ் மற்றும் அவரது மகன் பென்னிக்ஸ் விசாரணை காவலில் மரணமடைந்தனர். இந்த வழக்கை சிபிஐ விசாரிக்க தொடங்கும் வரை, சிபிசிஐடி விசாரிக்கும்படி உயர்நீதிமன்ற மதுரை கிளை உத்தரவிட்டது. இதனையடுத்து உடனடியாக வழக்குப்பதிவு விசாரணையை தொடங்கியது சிபிசிஐடி.

நேற்று பல்வேறு குழுக்களாக சென்று விசாரணை நடத்திய சிபிசிஐடி அதிகாரிகள், ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் மரணத்தை கொலை வழக்காக பதிவு செய்தனர். தீவிர விசாரணைக்குப் பிறகு இன்ஸ்பெக்டர் ஸ்ரீதர், எஸ்.ஐ. ரகுகணேஷ், எஸ்.ஐ. பாலகிருஷ்ணன், காவலர்கள் முருகன் மற்றும் முத்துராஜ் ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளனர். அடுத்தடுத்த விசாரணையில் மேலும் பலர் சிக்குவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. சாத்தான்குளம் சம்பவத்தில் சம்பந்தப்பட்ட போலீசார் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் வலியுறுத்தி வந்தனர்.

தற்போது சிபிசிஐடி அதிரடியாக போலீசாரை கைது செய்திருப்பதால் மக்கள் வரவேற்பு தெரிவித்துள்ளனர். நேற்று இரவு சப்இன்ஸ்பெக்டர் ரகு கணேஷ் கைது செய்யப்பட்டதும், சாத்தான்குளத்தில் பட்டாசு வெடித்து வரவேற்றனர்.

# சென்னையின் புதிய காவல் ஆணையர் மகேஷ்குமார் அகர்வால் பொறுப்பேற்றார்



சென்னையின் புதிய காவல் ஆணையராக மகேஷ்குமார் அகர்வால் இன்று காலை பொறுப்பேற்றுக் கொண்டார். காவல் ஆணையர் ஏ.கே. விஸ்வநாதன் அவரிடம் பொறுப்பை ஒப்படைத்து விடை பெற்றுக்கொண்டார். சென்னை காவல் ஆணையராக 2017ம் ஆண்டு மே மாதம் 15ம் தேதி ஏ.கே. விஸ்வநாதன் பொறுப்பேற்றார். 3 ஆண்டு 45 நாட்கள் அவர் பொறுப்பிலிருந்தார்.

அவரது பணிக்காலத்தில் பொதுமக்களுடன் இணைந்து பணியாற்றும் காவல் ஆணையராகப் பெயர் பெற்றார். கண்காணிப்பு கேமரா நிறுவியது, காவலன் செயலி, ஃபேஸ் டேக்கர் எனக் காவல்துறையில் பல்வேறு முறைகளை அமல்படுத்தி குற்ற எண்ணிக்கையைக் குறைத்தார்.பொதுமக்களைக் கண்ணியமாக நடத்த வேண்டும், சட்டப்படி நடக்க வேண்டும் என்பதில் உறுதியான காவல் ஆணையராக இருந்தார். இந்நிலையில் நேற்று முன் தினம் காவல் ஆணையர் உட்பட 39 காவல் அதிகாரிகள் மாற்றப்பட்ட நிலையில் சென்னை காவல் ஆணையர் ஏ.கே.விஸ்வநாதனும் மாற்றப்பட்டார். செயலாக்கப் பிரிவு ஏடிஜிபி மகேஷ்குமார் அகர்வால் சென்னை காவல் ஆணையராக நியமிக்கப்பட்டார்.

நேற்று அவர்கள் பதவி ஏற்காத நிலையில் இன்று காலை 10.45 மணியில் மகேஷ்குமார் அகர்வால் பதவி ஏற்றார். அவருக்கு வாழ்த்துத் தெரிவித்த காவல் ஆணையர் ஏ.கே.விஸ்வநாதன், அவரிடம் பொறுப்பை ஒப்படைத்தார். பின்னர் முறைப்படி காவல் ஆணையராக மகேஷ்குமார் அகர்வால் பொறுப்பை ஏற்றுக்கொண்டார். அவருக்கு காவல் உயர் அதிகாரிகள் வாழ்த்துத் தெரிவித்தனர். மகேஷ்குமார் அகர்வால் 1994ம் ஆண்டு பேட்ச் ஐபிஎஸ் அதிகாரி. சென்னையின் கூடுதல் காவல் ஆணையராகவும் பணியாற்றியுள்ளார். இவர் சட்டம் பயின்றவர்.

சொந்த மாநிலம் பஞ்சாப் ஆகும். தந்தையும் வழக்கறிஞர் என்பதால் சட்டம் பயின்று பின்னர் சிவில் சர்வீஸ் தேர்வு எழுதி 22 வயதில் ஐபிஎஸ் அதிகாரியாகப் பொறுப்பேற்றார். தேனி எஸ்.பி., தூத்துக்குடி எஸ்.பி., 2001ல் சென்னை பூக்கடை துணை ஆணையர், சென்னை போக்குவரத்து காவல் தெற்கு துணை ஆணையர் எனப் பொறுப்பு வகித்த மகேஷ்குமார் அகர்வால், பின்னர் சொந்த மாநிலமான பஞ்சாப் மாநிலத்தில் சிபிஐ எஸ்.பி.யாக அயல் பணியில் சென்றார்.

7 ஆண்டுகள் சிபிஐ அதிகாரியாக பஞ்சாப், ஹரியாணா, ஜம்மு காஷ்மீரில் பணியாற்றியுள்ளார். பின்னர் ஐஜியாகப் பதவி உயர்வுபெற்று தமிழகம் திரும்பிய மகேஷ்குமார் அகர்வால், சிபிசிஐடி ஐஜியாகப் பதவி வகித்தார். பின்னர் மதுரை காவல் ஆணையராகச் சென்றார். மீண்டும் சிபிசிஐடி ஐஜியாகப் பதவி ஏற்றார்.பின்னர் சென்னை தெற்கு மண்டல கூடுதல் ஆணையராகப் பொறுப்பேற்றார். பின்னர் செயலாக்கப் பிரிவு ஏடிஜிபியாக இருந்த மகேஷ்குமார் அகர்வால், தற்போது சென்னையின் இளம் காவல் ஆணையராகப் பொறுப்பேற்றுள்ளார்.

தமிழகம், இந்தியா, இலங்கை, சினிமா மற்றும் உலக நிகழ்வுகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள இணைந்திருங்கள் நமது நண்பன் இணையதளத்துடன்
இணையதள முகவரி:
https://nanban.ca



# இலங்கை வானொலித்துறையின் சிகரம் “நடா” என்ற நடராஜசிவம்

இலங்கையின் சிரேஷ்ட ஒலி, ஒளிபரப்பாளரும், சூரியன் FM வானொலியின் முதலாவது நிகழ்ச்சி முகாமையாளரும், முன்னாள் ஆலோசகருமான சி. நடராஜசிவம் அவர்கள் சில நாட்களுக்கு முன்னர் காலம் ஆனார் என்ற தகவலை முகநூல் பதிவுகளிலும், ஊடக நண்பர்களின் தகவல்கள் ஊடாகவும் அறிந்து கொள்ள முடிந்தது..

சூரியன் FM நிகழ்ச்சிகளுக்கு என்றொரு தனித்துவத்தையும் அடையாளத்தையும் ஏற்படுத்தியவர் நடராஜசிவம் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை.

அறிவிப்புத்துறையில் உள்நாட்டிலும், புலம்பெயர் சூழலிலும், பெயர் சொல்லக் கூடிய இளைய அறிவிப்பாளர் பட்டாளத்தையே உருவாக்கியவர். அவருடைய பாசறையில் வளர்ந்த பலரே, இன்று அறிவிப்புத் துறையில் கொடிகட்டிப் பறக்கிறார்கள். ஒவ்வொரு அறிவிப்பாளர்களையும் வடித்தெடுத்தவர். கலையகத்தில் நேரலையில் தவறுகள் நடந்தால் அடுத்தகணத்தில் கலையக தொலைபேசி அலற, அறிவிப்பாளர்களும் நடுங்குவார்கள். “உங்க என்ன புட்டே அவிக்கிறியல்” என தொடங்கி விழும் ஏச்சுக்களால் பல அறிவிப்பாளர்கள் புடம்போடப்பட்டவர்கள்.

2000 ஆண்டில் சந்திரசேகரமூர்த்தி ரமணன் என்னை அடையாளம் கண்டு, சூரியனுக்கு தூக்கிச் சென்ற காலப்பகுதியில் சக்தியா? சூரியனா என மனம் தடுமாறிய போது “ஐசே” உம்மைப் போன்றவர்களுக்கு எதிர்காலம் சூரியன் FM என வலியுறுத்தி சூரியனுக்கே வாருங்கள் என அழைத்தவர்.

அங்கு பணியாற்றிய 8 வருட காலத்தில் ஏறத்தாள 4 வருடங்கள் வரை அவருடன் இணைந்து பயணித்த அனுபவங்கள் நிறைய உண்டு. சூரியனின் செய்தி வாசிப்பாளர்கள் என ஒரு தனித்துவத்தை உருவாக்கியவர். மதிய வேளை இடைவேளையில் உணவு உண்ணும்போது அவர் கொண்டுவரும் மோர் நான் கொண்டு செல்லும் அப்பளம் மிளகாய் என இருவரும் பகிர்ந்து உண்ணுவது வழக்கம்.

செய்திகள் குறித்தும், செய்தி வாசிப்பு குறித்தும், செய்திகளின் தலையங்கங்கள் குறித்தும், அவற்றின் உள்ளடக“கம், எதனை முதன்மைப்படுத்துவது என்பது பற்றி எல்லாம் நீண்ட உரையாடல்கள், விவாதங்களை செய்திருக்கிறோம். அவர் எனக்கு வழங்கிய நெருக்குதல்கள், சவால்கள் அலாதியானவை. அந்த நெருக்குதல்கல்களையும் சவால்களையும் எதிர்கொள்வதற்கான எனது தேடல்களும், கடுமையான உழைப்பும் செய்தித்துறையில் செய்தி முகாமையாளராக என்னை பிரகாசிக்க வைத்தன.

2000 ஆண்டுகளின் தசாப்தத்தில் சூரியனின் நிகழ்ச்சிகள் நேயர்களை கட்டிவைத்திருந்தமைக்கு ஈடாக, சூரியன் செய்திகளும் கேட்டுணர்களை ஆட்கொள்வதற்கு, அப்போதைய நிகழ்ச்சி முகாமையாளரான, நடா அண்ணர் எமக்கு ஏற்படுத்திய சவால்களும், அழுத்தங்களும் முக்கிய காரணங்களாக இருந்தன.

என்ன செய்வது ஒரு கட்டத்தில் இருவரும் முரண்பட்டுக்கொண்டோம். மனித மனங்கள் சில கட்டங்களில் விட்டுக்கொடுப்புகளை மறுத்துவிடுகின்றன. முரண்டு பிடிக்கின்றன. நீயா? நானா என மோதிக் கொள்கின்றன. அதற்கு, நிகழ்ச்சி முகாமையாளரான அவரும், செய்தி முகாமையாளரான நானும் விதிவிலக்காக இருக்கவில்லை. இருந்தும் நடா அண்ணரின் திறமைகளை, அவரது தேடல்களை, புதுமைகளை, அனுபவங்களை என்றுமே நான் குறைத்து மதிப்பட்டது இல்லை.

நடா அண்ணா எங்கள் முரண்பாடுகளுக்குள்ளும் உங்களுடன் பலமுறை நான் பேசமுயன்றேன். ஆனால் உங்களிடம் இருந்த, உங்களுக்கே உரித்தான கர்வம் என்னுடன் உங்களை பேச அனுமதிக்கவில்லை.

**இருந்தும் ஓய்வில் இருந்த போது என்றோ ஒருநாள் முரணுக்கான இருவர் பக்கங்களையும் மீட்டுப்பார்த்து இருப்பீர்கள் என நம்புகிறேன்.**

**நீங்கள் இருக்கும் போது ஒரு குறிப்பு எழுத வேண்டும் என பலமுறை யோசித்தது உண்டு. ஆனால் உங்களுக்கே உரித்தான கர்வத்தை நன்கு அறிந்தவன் நான் என்பதால் அதனைத் தவிர்த்தேன். மன்னித்துவிடுங்கள்.**

“என்ன ஐசே புட்டா அவிக்கிறீர்” எனக் கேட்க நீங்கள் இன்றில்லை இனியும் இல்லை. ஆனால் “நடராஜசிவம்” என்ற பெயர் தமிழ் அறிவிப்புத் துறை இருக்கும் வரை நிலைத்திருக்கும். சென்றுவாருங்கள்....

***கொழும்பிலிருந்து நடராஜா குருபரன்***



# அம்பாறை மாவட்டம்: தேர்தல் கள நிலவரம்

**சிவா பரமேஸ்வரன் --- முன்னாள் மூத்த செய்தியாளர் பிபிசி**

இலங்கையில் சுதந்திரத்துக்கு பின்னர் ஏற்பட்ட முதலாவது இனக்கலவரம் 1956ல் அரங்கேறியது. அதே ஆண்டு ஆட்சியைக் கைப்பற்றிய பண்டாரநாயக்க தனிச் சிங்களச் சட்டத்தை நாடாளுமன்றத்தில் ஜூன் 5 ஆம் திகதி முன்வைத்தார். இதற்கு எதிராக தமிழரசுக் கட்சியினர் தலைவர் செல்வா தலைமையில் நாடாளுமன்ற வளாகத்தில் சத்தியாகிரகப் போராட்டத்தில் ஈடுபட்டபோது சிங்கள வன்முறையாளர்களினால் தாக்கட்டனர்.

இதன் எதிரொலியாக நாட்டின் பல பகுதிகளில் இன வன்முறை வெடித்தது. ஜூன் 11 முதல் 16 வரை ஐந்து நாட்கள் கல்லோயா நீர்த்தேக்கம் அமைந்திருக்கும் அம்பாறை மாவட்டத்தில் வன்முறை தொடர்ந்தது. அதில் 150க்கும் மேற்பட்ட தமிழர்கள் கொல்லப்பட்டனர், பலர் அதிகமானவர்கள் காயமடைந்தனர். கல்லோயா கலவரம் என்று அறியப்படும் இந்த வன்முறையே தமிழர்களுக்கு எதிரான முதலாவது இனக் கலவரமாக அறியப்படுகிறது.

சுதந்திரத்துக்கு பின்னர் தமிழ் பேசும் மக்களின் பிரதேசங்களில் திட்டமிட்ட சிங்கள குடியேற்றம் காரணமாக பெரிதும் பாதிக்கப்பட்ட பிரதேசம் திகாமடுல என்று சிங்களத்தில் கூறப்படும் அம்பாறை மாவட்டம். கல்லோயா நீர்ப்பாசனத் திட்டமே இந்த வலிந்த சிங்களக் குடியேற்றத்துக்கு காரணமாக அமைந்தது. அன்று தொடக்கம் குடிப்பரம்பல் நிலவரம் மாற ஆரம்பித்து தமிழ் மக்களின் விகிதாசாரம் குறைய ஆரம்பித்து இன்றும் தொடருகிறது.

வடக்கு கிழக்கு இணைந்த அதிகாரப் பகிர்வில், முஸ்லிம்களுக்குரிய அரசியல் அபிலாஷை தென்கிழக்கு அலகு.

முஸ்லிம்கள் மிகப் பெரும்பான்மயாக வாழும் மாவட்டம் அம்பாறை. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பலம்.

அக்கட்சியின் ஸ்தாபகரான எம். எச். எம். அஷ்ர.்.ப், தனது அரசியல் பிரவேசத்தை தமிழர் விடுதலைக் கூட்டணியிலேயே ஆரம்பித்தார். 1979 ஆம் ஆண்டு மாவட்ட அபிவிருத்தி சபை தேர்தலின் போது ஏற்பட்ட முரண்பாடு, ஆயுதப் போரட்ட காலத்தில் முஸ்லிம்கள் எதிர்நோக்கிய அச்சுறுத்தல் மற்றும் நெருக்கடி காரணமாகவே இக்கட்சியை அவர் உருவாக்கினார்.



இம்மாவட்டத்திலிருந்து தெரிவாகும் உறுப்பினர்களின் எண்ணிக்கை 7. ஒரு கட்சி அல்லது சுயேச்சைக் குழு நிறுத்த வேண்டிய வேட்பாளர் எண்ணிக்கை 10.

அரசியல் கட்சிகள்-20, சுயேச்சைக் குழுக்கள்-33 போட்டியிடுவதால், நாட்டிலேயே மிக நீளமாக வாக்குச் சீட்டு பயன்படுத்தப்படும்.

**ஐக்கிய தேசியக் கட்சி:**

கடந்த தேர்தலில் முஸ்லிம் காங்கிரஸுடன் இணைந்து போட்டியிட்ட இக்கட்சி இம்முறை பலவீனமான நிலையில் போட்டியிடுகிறது. 2015ல் தேசியப் பட்டியல் மூலம் நாடாளுமன்றத்தில் பிரவேசித்த அனோமா கமகே தலைமை வேட்பாளராகப் பெயரிடப்பட்டுள்ளார்.

இம்மாவட்டத்தில் தெரிவாகியிருந்த இவரது கணவர் தயா கமகே இம்முறை கொழும்பு மாவட்டத்தில் போட்டியிடுகிறார்.

ஐதேக பட்டியலில் இரண்டு முஸ்லிம்களும் ஒரு தமிழரும் இருந்தாலும், அவர்கள் ஒப்பீட்டளவிலேயே சிறுபான்மையினத்தவர்கள்.

**ஐக்கிய மக்கள் சக்தி:**

இம்மாவட்டத்திலுள்ள 43% முஸ்லிம் வாக்குகளை இலக்கு வைத்தே, ஐக்கிய மக்கள் சக்தி முஸ்லிம் காங்கிரஸுடன் இணைந்து போட்டியிடுகிறது. வேட்பாளர் பட்டியலில் 6 முஸ்லிம்கள், 3 சிங்களவர் மற்றும் ஒரு தமிழர் இடம்பெற்றுள்ளனர்.

2015 தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து போட்டியிட்டு மு கா சார்பில் தெரிவான எச்.எம்.ஹாரிஸ், எம்.ஐ.எம்.மன்சூர், .்.பைசல் காசிம் மற்றும் தேசியப் பட்டியல் உறுப்பினர் ஏ.எல்.நசீர் உட்பட 6 பேர் இம்முறை போட்டியிடுகிறார்கள்.




**அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் (ரிஷாத் கட்சி):**

ஏனைய மாவட்டங்களில் ஐக்கிய மக்கள் சக்தியுடன் கூட்டாகப் போட்டியிட்டாலும், 2015 போல் இம்முறையும் இம்மாவட்டத்தில் தனித்து போட்டியிடுகிறது. ஐக்கிய மக்கள் சக்திக்கு கிடைக்கும் முஸ்லிம் வாக்குகளின் விருப்பத் தெரிவு தமக்கு சாதகமாக அமையாது என்பதால், ஒரு ஆசனத்தையாவது பெற வேண்டும் என்பதற்காக ரி'ாத் கட்சி தனித்துப் போட்டியிடுகிறது.

இக்கட்சியின் அநேக வேட்பாளர்கள், ஏற்கனவே முஸ்லிம் காங்கிரஸ், மற்றும் தேசியக் காங்கிரஸிலிருந்து அதிருப்தி காரணமாக வெளியேறியவர்கள்.

**தேசிய காங்கிரஸ்:**

கடந்த ஜனாதிபதி தேர்தலில் தாமரை மொட்டுக் கட்சியுடன் கூட்டு ஒப்பந்தம் செய்து கொண்ட ஒரு முஸ்லிம் கட்சி தேசியக் காங்கிரஸ். ஆனால் இம்முறை மொட்டுக் கட்சியால் கைவிடப்பட்ட நிலையில் இக்கட்சி தனித்துப் போட்டியிடுகிறது. தலைவர் அதாவுல்லா உட்பட போட்டியிடும் பத்து பேரும் முஸ்லிம்கள்.



சில மாதங்களுக்கு முன்பு தொலைக்காட்சி விவாதம் ஒன்றில் முன்னாள் அமைச்சர் மனோ கணேசனுடன் வார்த்தைப் பிரயோகம் ஒன்றில் மல்லுக்கட்டியவர். இதனால் ஆத்திரமடைந்த மனோ கணேசன் அவர் மீது குடிநீரை வீசியது நேரடியாக பலரால் தொலைக்காட்சியில் பார்க்கப்பட்டது.

2015க்கு முன்பு அதாவுல்லா மத்திய அமைச்சில் பலவேறு பொறுப்புகளை வகித்தவர்.

**ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன:**

2015 தேர்தலில் தெரிவான இரு சிங்கள நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட ஏழு சிங்களவர்கள், இரண்டு முஸ்லிம்கள் மற்றும் ஒரு தமிழரும் பட்டியலில் உள்ளனர்.

இரு முஸ்லிம் வேட்பாளர்களில், முன்னாள் அமைச்சர் மையோன் முஸ்தபாவின் மகன் ரிஸ்லி முஸ்தபதாவும் ஒருவர். 2010 தேர்தலில் த தே கூ சார்பில் தெரிவாகி பின்னர் பல்டியடித்த பி.பியசேன இக்கட்சியில் போட்டியிடும் வாய்ப்பை எதிர்ப்பார்த்த போதும் ஏமாற்றமே மிஞ்சியது.

**தமிழ் தேசியக் கூட்டமைப்பு:**

முஸ்லிம் கட்சிகளில் முஸ்லிம்களே வேட்பாளர்களாக இருப்பது போல் தமிழ் கட்சிகளில் தமிழர்களே இடம்பெற்றுள்ளார்கள். கூட்டமைப்பு சார்பில் 2015ல் தெரிவான க.கோடீஸ்வரன் தலைமையில் வேட்பாளர்கள் நிறுத்தப்பட்டுள்ளனர்.



இவர் கடந்த தேர்தலில் டெலோ சார்பில், கூட்டமைப்பின் பட்டியலில் இடம்பிடித்து நாடாளுமன்றத்துக்கு தெரிவாகியிருந்தாலும் பின்னர் தமிழரசுக் கட்சியில் இணைந்து கொண்டார். இதனால் வேட்பாளர் பட்டியலை முடிவு செய்யும் போது இரு கட்சிக்கும் இடையில் உரசல் ஏற்பட்டது.

பட்டியலில் பத்து பேர் இடம்பெற்றிருந்தலும் பாதியளவில் ஹடம்மிஹ வேட்பாளர்களே.

**இதர தமிழ் கட்சிகள்:**

அகில இலங்கை தமிழர் மகா சபை விநாயகமூர்த்தி முரளிதரன் (கருணா அம்மான்) தலைமையில் வேட்பாளர்களை நிறுத்தியுள்ளது.

ஈழ மக்கள் ஜனநாயக கட்சி, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் ஆகியவையும் வேட்பாளர்களை நிறுத்தியுள்ளன.

தமிழர் விடுதலைக் கூட்டணி மற்றும் தமிழ் தேசிய மக்கள் கூட்டணி ஆகியவை இம்மாவட்டத்தில் போட்டியிடவில்லை.

**கள நிலவரம்:**

கடந்த தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சியின் அணியில் முஸ்லிம் காங்கிரஸ் இடம்பெற்றிருந்ததால் 4 ஆசனங்கள் அவர்களுக்கு கிடைத்தது. அதில் மூவர் முஸ்லிம்கள் ஒருவர் சிங்களவர். ஐமசுமு சார்பில் இரு சிங்களவர்கள், கூட்டமைப்பு சார்பில் ஒரு தமிழரும் தெரிவாகினர்.

முஸ்லிம்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட இந்தத் தேர்தல் மாவட்டத்தை பொறுத்தவரை, பலமான முஸ்லிம் கட்சியொன்று ஒரு பிரதான தேசியக் கட்சியுடன் இணைந்து போட்டியிடும் பட்சத்தில், அந்தக் கூட்டணிக்கே அதிக இடங்கள் கிடைப்பது கடந்தகால வரலாறு.

அந்த அடிப்படையில்தான் இம்முறை மு கா, சஜித் கட்சியுடன் கூட்டமைத்து போட்டியிடுவதால், தனக்குரிய 3 ஆசனங்களைத் தக்கவைப்பதோடு, கூடுதலாக ஒரு இடத்தைப் பெற்றாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை பொறுத்தவரை, திருகோணமலை மாவட்டம் போலவே இம்மாவட்டத்திலும் சிங்கள வாக்குகளையே குறிவைத்துள்ளது. கடந்த ஜனாதிபதி தேர்தலில் பெற்ற வாக்குகளைவிட கூடுதலான வாக்குகளைப் பெற்றால் அவர்கள் இரண்டு இடங்களை பெறக் கூடும்.

ஏனைய இரண்டு இடங்கள் ததேகூ, தேசிய காங்கிரஸ், ரி'ாத் கட்சி, ஐதேக ஆகிய நான்கு கட்சிகளுக்கு இடையேதான் பகிரப்படும் வாய்ப்பு உள்ளது. இதில் இரண்டு கட்சிக்கு தலா ஒரு இடம் கிடைக்கக் கூடும்.

ஜனாதிபதி தேர்தலில் இம்மாவட்டத்திலுள்ள சிங்கள வாக்காளர்களில் பெரும்பாலானோர் கோத்தாவுக்கே வாக்களித்தனர். தற்போது ஐக்கிய தேசிய கட்சி பிளவுபட்டுள்ள நிலையில், சிங்கள வாக்குகள் தாமரை மொட்டுக்கு சாதகமாகவே உள்ளது.

இம்மாவட்டத்தில் 18% தமிழர்கள் இருந்தாலும், இந்தத் தேர்தலில் ஒரு ஆசனத்தையாவது அவர்களால் பெற முடியுமா என்பது கேள்விக்குறியாக உள்ளது.

கடந்த தேர்தலில் 17% வாக்குகளைப் பெற்று ஒரு ஆசனத்தைத் தமிழர்கள் தக்கவைத்துக் கொண்டனர்.

கல்முனை தமிழ் பிரதேச செயலகம் தொடர்பான பிரச்சினை, தமிழர்களின் காணிகள் பறிபோகுதல் போன்ற வி'யங்களில் கூட்டமைப்பு தமிழ் மக்களின் நலன்களைப் பாதுகாக்கவில்லை என்கிற குற்றச்சாட்டு எதிரொலிக்கிறது.



இம்முறை கருணா அம்மான் ஒரு கட்சியில் போட்டியிடுவதால், குறிப்பிட்ட அளவிலான வாக்குகளை அவரால் பெற முடியும். இந்த மாவட்டத்தில் முஸ்லிம்களின் அரசியல், சமூக, பொருளாதார ஆதிக்கத்திலிருந்து தமிழர்களை பாதுகாக்க கருணா அம்மானால் தான் முடியும் என்று ஒரு சாரார் நம்புகின்றனர். ஆனால் இந்த நம்பிக்கை வெற்றியை பெற்றுத்தருமா?

தமிழ் வாக்குகள் சிதறும் பட்சத்தில் 1994 தேர்தல் போன்று தமிழர்களின் பிரதிநிதித்துவம் இல்லாத மற்றுமோர் தேர்தலாக இது அமையக் கூடும் எனும் அச்சமும் உள்ளது.

1994ல் தவிகூ மாவை சேனாதிராஜா தலைமையில் வேட்பாளர்களை நிறுத்தியது. வெளி மாவட்டத்தைச் சேர்ந்த ஒருவர் தலைமை வேட்பாளராகப் போட்டியிடுவதற்கு எதிர்ப்பை வெளிப்படுத்திய தரப்பினர், தமிழர் மகா சபை என்ற பெயரில் சுயேச்சையாகப் போட்டியிட்டனர். டெலோவும் தனித்துப் போட்டியிட்டது. இருதரப்பும் வாக்குகளைப் பிரித்ததால் தமிழரின் பிரதிநிதித்துவம் பறிபோனது.

அன்று மாவைக்கு எதிரான சுயேச்சைக் குழுவுடன் தொடர்புடையவர்களே இப்போது கருணா அம்மானுக்கு பக்கபலமாக உள்ளனர்.

தமிழ மக்களின் பிரதிநிதித்துவம் இழக்கப்படாமல் இருப்பது அங்குள்ள தமிழ மக்களின் வாக்குகளிலேயே தங்கியுள்ளது.


Amma
Brand
இப்பொழுது கனடாவிலும்
கிடைக்கின்றது!


Amma
Apple Cider
with Mother Vinegar
LOOSE
WEIGHT
HELPS IN :
WEIGHT MANAGEMENT
GLOWING SKIN
GOOD FOR HEART
BLOOD PRESSURE
URIC ACID
100% Natural
NOW IN CANADA
Amma
Apple Cider
with Mother Vinegar
Import and Deliver
AMMA FOOD INC.
647-832-5471


Premium Quality
Amma
Gingelly Oil
(Contains Permitted Anti-Oxidants)
சுத்தமான நல்லெண்ணெய்
NOW IN CANADA
Import and Deliver
AMMA FOOD INC. 647-832-5471
நல்லெண்ணெய்
750ml
375ml


Amma
Herbal
Juices
NOW
IN
CANADA
Jamun with Karela Juice
Aloe Vera Juice
Karela Juice
Amla Juice
Super Energizer
Neem Leaf with Aloe Vera Juice
Body Pain Relax Juice
with Aloe Vera
Aloe Noni with Aloevera Juice
100% HERBAL
100% NATURAL
Import and Deliver
AMMA FOOD INC.
647-832-5471

SKN

# SKN FINANCIAL

www.sknfinancial.com




கனடாவில் மிகக் குறைந்த வட்டி வீதத்தில் தங்க அடைவு செய்யக் கூடிய ஒரே அடைவு மாடம்

முழுமையாக காப்புறுதி செய்யப்பட்டது

- $ அவசரப் பணத் தேவையா? புதிய வியாபாரம் தொடங்கப் பணம் தேவையா?
- $ புதிய மனைஎன வாங்குவதில் பணச்சிக்கலா?
- $ உங்கள் மாதாந்த வட்டியை வங்கியில் கட்டும் வசதியும் உண்டு
- $ உங்கள் அடைவுகளை இலகுவாக மீட்பதற்குப் பலவிதமான திட்டங்கள் உள்ளன
- $ வட்டித் தொகைக்கு வரிவிலக்கு பற்றுச் சீட்டு வழங்கபடும்

உங்கள் நகைகளுக்குப் பாதுகாப்பு!..

குறைந்த வட்டி!..(2% முதல்)

நிறைந்த பெறுமதி!...

www.sknfinancial.com

**SCARBOROUGH**
801 Markham Road
(Painted Post Plaza)
Markham & Ellesmere
647-729-5238

**BRAMPTON**
85 Kennedy Road South, Unit 33
( Next to TIM HORTONS )
Kennedy & Steeles
905-499-0800

# STEELES PODIATRY CLINIC

## கால் சம்பந்தப்பட்ட நோய்களுக்கான சிறப்பு மருத்துவர்

ஸ்காபுறோ, மார்க்கம் நகரங்களுக்கு இடையில் அமைந்துள்ளது

**WE ACCEPT**
- Extended Health Care
- Private - Work Insurance
- MVA - WSIB
- ODSP - Social Service

**LIST OF SERVICES**
- General & Diabetic Care
- Foot Pain Treatment
- Sports Medicine
- Surgical Procedures
- Custom-Made Orthotics
- Orthopaedic Shoes
- Compression Stockings
- Ankle - Knee - Back Braces

**ENGLISH & TAMIL - SPEAKING FOOT SPECIALIST/ DPM, DOCTOR OF PODIATRIC MEDICINE**





உங்கள் கால், முழங்கால், மற்றும் பாதம் தொடர்பான, சகலவித பிரச்சினைகளுக்கும், சிறந்த முறையில் மருத்துவத் தீர்வு வழங்கி வருகிறார் தமிழ் பேசும் கால் சிறப்பு மருத்துவப் பட்டதாரி (Podiatry).

5981 STEELES AVE E. UNIT 5
SCARBOROUGH, ON M1V 5P7

**416.298.FOOT (3668)**

மேலதிகமான உள்ளூர் சமூக வணிகங்களும் சேவைகளும் மீண்டும் திறக்கப்படுவதனாலும், சமூகமாக ஒன்றுகூடும் நபர்களின் தொகை 10 ஆக அதிகரிப்பதனாலும், நாம் அனைவரும் ஒருவரையொருவர் பாதுகாக்கும் எமது முயற்சிகளைக் கண்டிப்பாகத் தொடர வேண்டும்.





**உடல் ரீதியான இடைவெளியைக் கடைப்பிடிக்கவும்**, இரண்டு மீட்டர் இடைவெளி இருக்குமாறு பார்த்துக் கொள்ளவும்



உடல் ரீதியான இடைவெளியைக் கடைப்பிடிப்பது ஒரு சவாலாக இருக்கும்போது, **முகக்கவசம் ஒன்றினை அணிந்து கொள்ளவும்.**



**தொடர்ச்சியாக அடிக்கடி கைகளைக் கழுவிக் கொள்ளவும்**



உங்களுக்கு COVID-19 இருப்பதாக அல்லது அந்த வைரஸ் தாக்கத்துக்கு நீங்கள் முகம் கொடுத்திருப்பதாக எண்ணினால், **சோதனைக்கு உட்படவும்.**

**வீட்டிலும் வெளியிலும் பாதுகாப்பாக இருந்து கொள்ளவும். உயிர்களைப் பாதுகாக்கவும்.**

ontario.ca/coronavirus ஐப் பார்வையிடவும்.

ஒன்ராறியோ அரசாங்கத்தால் கட்டணம் செலுத்தப்பட்டது

Ontario

# HAPPY CANADA DAY!

Enjoy this beautiful day which reminds us of the precious gift of freedom by the sacrifices of our women and men in uniform.

அனைத்து உள்ளங்களுக்கும் கனடா தின நல் வாழ்த்துக்கள்!!

எம்மை வாழ வைக்கும் இந்தத் தங்க மண்ணுக்கு எம்மால் இயன்ற நன்மைகளை என்றும் செய்வோமென உறுதியெடுத்துக் கொள்வோம்!



**Aris Babikian, MPP**
Scarborough-Agincourt
www.arisbabikianmpp.ca
416 297 6568
aris.babikian@pc.ola.org



# ஸ்ரீ காளிகாம்பா துர்க்காமாதா தேவி ஜோதிடம்



இந்தியாவில் தலைமுறை தலைமுறையாக ஜோதிடக் கலை வல்லுனர் வழிவந்த பிரபல ஜோதிடர் பண்டித் மூர்த்தி

**SRI KALI KHAMBA DURGA MATHA DEVI**

INDIAN ASTROLOGER, PSHYCHIC & SPIRITUALIST

Expert In Horoscope, Palmistry, Face Reading World Famous Indian Astrologer &Pshychic Reader passed away from generation to generation




## If You Are Having Problems? He Has A Solution!!

ARE YOU DISAPPOINTED MEETING ASTROLOGERS NOT GETTING SOLUTIONS?
Then Once Meet Our World Famous Indian Astrologer Shivananda BabaJi To Get Permanent Solution To All Your Problems Either Personal Life Or Professional Life In Just Few Days With Best Results.




Best Solution For Your Best Future

SPECIALIST IN BRINGING BACK LOVED ONES

TAKE RIGHT DECISION AT RIGHT TIME

- ★ Money Blessings
- ★ Love Problems
- ★ Health Problems
- ★ Relationship Problems
- ★ Husband & Wife Disputes
- ★ Family Arguments
- ★ Depression
- ★ Sexual Problems
- ★ Business Problems
- ★ People's Jealousy
- ★ Enemy Problems
- ★ House Protection
- ★ Divorce
- ★ Court Cases
- ★ Land Property Issues
- ★ Childless Couples
- ★ Drinking Problems
- ★ Marriage Problem
- ★ Education
- ★ Job/Work Problems
- ★ Drug Addictions
- ★ Intimacy Problems
- ★ Children's Problems
- ★ Negative Energy

★ Worries about Loved Ones ★

IF YOU ARE NOT SATISFIED WITH OTHER ASTROLOGERS THEN COME TO US AND GET ALL YOUR PROBLEMS SOLVED. 100% GUARANTEED!

OPEN 7 DAYS | 100% RESULT GUARANTEED GIVE LIFE LONG PROTECTION | 10AM TO 8PM

ALL RELIGIONS WELCOME | ALL READING ARE PRIVATE & CONFIDENTIAL | WALK-INS WELCOME

CALL AND BOOK AN APPOINTMENT

கைரேகை
கல்வி, உத்தியோகம்
இலட்சுமி வசீகரம்
பணப் பிரச்சனை
உடல்நலப் பிரச்சனை
வெளிநாட்டுப் பயணங்கள்
எதிரிகள் தொல்லை
சொத்து பிரச்சனைகள்
திருமணயோகம்
சர்ப்ப தோஷம்
பாலியல் பிரச்சனைகள்
நாம சட்சத்திரம்
தொழில், வியாபாரம்
வதிவிடப்பிரச்சனைகள்
காதல் பிரச்சனை
மனச்சோர்வு
குடும்ப பிரச்சனைகள்
விவாகரத்து
நீதிமன்ற வழக்குகள்
குழந்தைப் பாக்கியம்
கர்ப்பதோஷம்
மது போதை பழக்கம்
பெண்பிள்ளைகள் - பெற்றார் பிரச்சனைகள்

கஸ்ட - நஸ்டங்கள் மற்றும் உங்கள் அன்பானவர்களைப் பற்றிய கவலையா என்னிடம் வாருங்கள் உங்கள் அனைத்து பிரச்சனைகளையும் 100% தீர்த்து வைக்கின்றேன்.

**PANDITH: MURTHY**
**647 - 390 - 7388**

67A Dundas St West,
Mississauga, ON, L5B 1H7
(Royal Jewellery Upstairs - Dundas St W & Confederation Pkwy Intersection)

Ontario வில் அரச அங்கீகாரம் பெற்ற

# கனகாம்பிகை

## தங்கநகை அடகுமாடம்

KANAGAAMBIKAI
PAWN BROKERS





25
வருடங்கள்

## உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த வட்டி வீதத்தில் தங்க நகை அடவு

நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய
ஒரே கூரையின் கீழ்

# கனகாம்பிகை

## பவுண் வங்கி

தங்கம் வாங்க கனகாம்பிகைக்கு வாங்க...

2613 Eglinton Ave. East, Scarborough ON M1K 2S2

416 269 7198

மலேசிய மடல்

# பத்துமலை திருத்தலம் திறக்கப்பட்டது:

## 105 நாட்களுக்குப் பின் உச்சிக் கோயிலில் முருகனை வழிபட்டனர்



நக்கீரன்

பத்துமலை, ஜூலை 02:

அரபு நாடுகளின் சுற்றுலாத் துறை சார்பில் செய்யப்படும் விளம்பரங்களில் மலேசியாவை அறிமுகம் செய்யும்பொழுது பத்துமலை திருத்தலத்தில் அமைக்கப்பட்டுள்ள திருமுருகக் கடவுளின் திருவுருவச் சிலையைத்தான் காண்பிப்பார்கள். அந்த அளவிற்கு பன்னாட்டு அளவில் புகழ்பெற்ற சுற்றுலாச் சின்னமாக முருகன் சிலை விளங்குகிறது.

ஆறு தலையாயக் கொள்கைகளைக் கொண்ட இந்து சமயயத்தில் கௌமாரக் கொள்கையின் நாயகனாம் வேலவனை வழிபாட்டுத் தலமாகக் கொண்டுள்ள பத்துமலை ஆலயம் 105 நாட்களுக்குப் பின் தற்பொழுது திறக்கப்பட்டுள்ள நிலையில் குறைவான பக்தர்களே ஆலய வளாகத்திலும் குகைக் கோயிலிலும் தென்படுகின்றனர்.

இது குறித்து கோலாலம்பூர் அருள்மிகு மாரியம்மன் தேவஸ்தானத்தின் பொதுச் செயலாளர் சேதுபதி குமாரசாமியிடம் வினவியபோது, ஜூலை முதல் நாள் காலையில் பத்துமலைத் திருத்தலம் திறக்கப்பட்ட வேளையில் அதிகமான பக்தர்கள் வந்தனர் என்றவர், மறுநாளான இன்று குறைவான அளவில் பக்தர்கள் காணப்பட்டாலும் நாளை வெள்ளிக்கிழமையும் அதைத் தொடர்ந்து வரும் வார விடுமுறை நாட்களிலும் பக்த அன்பர்கள் அதிகமாக வருவார்கள் என்று எதிர்பார்ப்பதாக கௌடாவில் இணைய மற்றும் பருவ இதழ்களாக ஒருசேரத் திகழும் உதயனுக்கான செய்தியில் குறிப்பிட்டார்.

ஏறக்குறைய ஒன்றேகால் நூற்றாண்டு வரலாற்றைக் கொண்ட பத்துமலை திருமுருகன் திருக்கோயில், கோவிட்-19 தாக்கத்தினால் அரசு அறிவித்த நடமாட்டக் கட்டுப்பாட்டு ஆணையைத் தொடர்ந்து கடந்த மார்ச் திங்கள் 18-ஆம் நாள் மூடப்பட்டது. கொரோனா கிருமியின் பரவலும் பாதிப்பும் மலேசியாவில் கட்டுப்பாட்டிற்கு வந்துள்ள தற்போதைய நிலையில் அண்மையில் நடமாட்ட கட்டுப்பாட்டு ஆணையில் மத்தியக் கூட்டரசு ஒருசில தளர்வு அம்சங்களை அறிமுகம் செய்ததன் விளைவாகக நாட்டில் உள்ள ஆலயங்கள் பொதுமக்களின் வழிபாட்டிற்காக மீண்டும் திறக்கப்பட்டன.

ஆனாலும் பக்தர்கள் மற்றும் பொது மக்களின் சுகாதாரத்திலும் பொது நலனிலும்அக்கறைக் கொண்ட தேவஸ்தான நிருவாகம், ஆலய வளாகம் முழுவதும் துப்புறவு செய்து தூய்மை நிலையை உறுதி செய்துகொண்டு முன்னறிவுப்பும் செய்துவிட்டு ஜூலைத் திங்கள் முதல் நாள் காலையில் பொதுமக்களின் வழிபாட்டிற்காக திறந்து விட்டது.

பத்துமலையில் குகைக் கோயிலில் குடிகொண்டுள்ள மூல முர்த்தியான கந்தனை வழிபடுவதற்காக பக்தர்களும் உள்நாட்டு-வெளிநாட்டு சுற்றுப் பயணிகளும் என பல்லாயிரக் கணக்கில் தங்களைக் கடந்து போவதையும் மீண்டும் கீழிறங்குவதையும் அனுபவித்த 272 படிக்கட்டுகளும், ஒருவேளை உணர்வையும் உயிரையும் பெற்றிருந்தால், இத்தனை நாளும் தனிமையில் வாடிய துன்பம் விலகியதே என்ற பூரிப்பில் உள்ளம் மலர்ந்திருக்கலாம்.

செங்கற்களாலும் வெண்காரையாலும் உருவாக்கப்பட்ட படிக்கட்டுகள் அவ்வாறு எண்ணிடத் தவறினாலும் பகல் முழுவதும் இந்தப் படிக்கட்டுகளை வசிப்பிடமாகவும் உணவுத் தேடலுக்கான இடமாகவும் கொண்டுள்ள நூற்றுக் கணக்கான குரங்குகள், கடந்த மூன்றரை மாதங்களாக பத்துமலை படிக்கட்டுகளில் நிலவிய வெறிச்சோடிய வெறுமைத்தன்மை விலகியதற்காகவும் மக்களின் நடமாட்டத்திற்காகவும் நிச்சமாக மகிழக் கூடும். மனிதர்களைவிட பக்தர்களின் கைகளில் இருக்கும் தேங்காய், வாழைப்பழம், பூக்களைக் கொண்ட அர்ச்சனைத் தட்டு, குடி நீர் போத்தல்கள், சுவை நீர்க் கலன்கள், தின் பண்டங்கள் அகியவற்றின்மீதுதான் குரங்குகளின் கவனம் மூழ்வதும் இருக்கும்.

சில வேளையில் மூழல் பார்த்து வழிப்பறி செய்யவும் தயங்காத இந்தக் குரங்குகளுக்கு கடந்த மூன்றரை மாதங்களாக ஆலய வளாகத்தை ஒட்டியுள்ள காட்டில் கிட்டும் காட்டுவாழைப் பழங்கள் போதவில்லையோ அல்லது சுற்றுப்பயணிகள் குழந்தைகள் மூலம் கிட்டும் பல்சுவை உணவு கிட்டாமையால் நேர்ந்த ஏக்கமோ என்னவோ அனைத்துக் குரங்குகளும் மெலிந்து காணப்பட்டன.

பிரசாதம் என்னும் அருளுணவோ, அருள் நீர் எனப்படும் தீர்த்தமோ பக்தர்களுக்கு வழங்கப்படாதென்று தேவஸ்தானத் தலைவர் டான்ஸ்ரீ நடராஜா தெளிவாக அறிவித்துவிட்ட நிலையில் பக்தர்களின் கையில் பையோ அல்லது அர்ச்சனைத் தட்டோ இல்லாததால் பெரும்பாலான குரங்குகள் ஒன்றுக்கொன்று பேன் பார்த்துக் கொண்டு படிக்கட்டுகளில் இளைப்பாறுவதை எப்படி எடுத்துக் கொள்வதென்று புரியவில்லை.

குகைக் கோயிலுக்கு செல்பவர்கள் ஏறுவதற்கு இரு வரிசை அதேப்போல் இறங்குவதற்கு இரு வரிசை என்றிருந்ததை ஒழுங்கு படுத்தி, நடுவில் உள்ள இரு வரிசைகளை மட்டும் ஏறுவதற்கு ஒன்றும் இறங்குவதற்கு ஒன்றும் என ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளதால் இருபுறமும் ஆள் நடமாட்டம் இல்லாத இரு வரிசைப் படிக்கட்டுகளில் ஓய்வெடுப்பத்தும் அவ்வப்பொழுது தடுப்புச் சுவற்றில் தாவி அங்கு வரும் ஒருசில பக்தர்(கை)களை நோட்டமிடுவதும் என் பொழுதைக் கழிக்கும் குரங்குகளின் சேட்டையும் உணவு வேட்டையும் முன்பைப் போல மீண்டும் இடம்பெறும் காலம் எப்போது கனியும் என்று தெரியவில்லை.

பத்துமலையில் மட்டுமல்ல் அருள்மிகு மாரியம்மன் தேவஸ்தான நிருவாகத்தின்கீழுள்ள இன்னோர் ஆலயமும் மலேசிய இந்துக்களின் தாய்க் கோவிலுமான கோலாலம்பூர் அருள்மிகு மாரியம்மன் ஆலயத்திலும்கூட பக்தர்களின் வருகை குறைவாகத்தான் காணப்படுகிறது. இருந்தபோதும் அது வழக்கமான ஒன்றுதான் என்று குறிப்பிட்ட கு.சேதுபதி, தேவஸ்தானத்தின் மூன்றாவது ஆலயமான கோலாலம்பூர் கோட்டுமலை பிள்ளையார் கோவிலில் மட்டும் பகதர் கூட்டம் வழக்கம்போல நிரம்பி வழிவதாகச் சொன்னார்.

ஆன்மிக தலமும் சுற்றுலாத் தளமுமான பத்துமலை முருகன் ஆலயத்திற்கு பக்தர்கள் இனி வழக்கம்போல வரலாம் என்றும் ஆனால், அரசாங்கத்தின் அறிவுறுத்தலுக்கு ஏற்ப சமூக இடைவெளியைக் கடைப்பிடிக்க வேண்டும் அத்துடன், சுவாசக் கவசத்தையும் அவசியம் அணிந்து வரவேண்டும் என்பதை மனதிற் கொள்வதுடன் முதியோரையும் 12 வயதிற்குக் கீழான சிறார்களையும் ஆலயத்திற்கு அழைத்து வர வேண்டாம் என்றும் பக்த அன்பர்களை சேதுபதி கேட்டுக் கொண்டார்.

வெளிநாட்டைச் சேர்ந்தவர்களும் குழந்தையுடன் வரும் பெற்றோரும் குறிப்பாக தாய்மார் அனைவரும் கீழ்த்தளத்தில் தடுத்து நிறுத்தப்படுகின்றனர். இது குறித்து தேவஸ்தானத்தின் சார்பில் பலகட்டங்களில் அறிக்கை வெளியிட்டும் அறிவிப்பு செய்திருந்தும் குழந்தையுடன் வரும் பெற்றோரைக் காண முடிகிறது.

நாட்டின் மேலக்கரை மாநிலமான பகாங்கைச் சேர்ந்த இர. சுரேந்தர் என்பவரும் அவரின் மகனும் ஒருசேர முருகக் கடவுளுக்கு முடி காணிக்கை செலுத்துவதற்காக முடி இறக்கிவிட்டு தலையில் சந்தனம் பூசிய கோலத்துடன் உதயனுக்கு காட்சி தந்தனர்.

அதைப்போல, பழைய அரச நகரான கிள்ளானில் இருந்த வந்த குடும்பம், பெண் குழந்தைக்கு முடி இறக்க கடந்த ஐந்து மாதங்களாகக் காத்திருந்ததாகவும் முடி வளர்ந்து குழந்தை சிரமப்பட்டதால் தாங்களும் சிரமத்தைப் பாராமல் வந்து முடி முருகனுக்கு முடி காணிக்கை செலுத்திவிட்டு உடனே ஊர் திரும்புவதாகவும் கூறினர்.

“ஏறக்குறைய மூன்றரை மாதங்களுக்கு மேல் பக்தர்கள்தான் ஆலயங்களுக்குள் அனுமதிக்கப்படவில்லையேத் தவிர, இறைவனுக்கு உண்டான அபிேகம் ஆராதனை

(தொடர்ச்சி 15ம் பக்கம்)


SHANGARA DEVI ASTROLOGY & PSYCHIC CENTER





Master. GURU SWAMY

Most Powerful Spiritualist from India

We can Handle any Problem Are you depressed & Lonely?

உங்கள் கடந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் பற்றி

உங்கள் கை, முகம், நகம்,குறிப்புப் பார்ப்பதன் மூலம் அறிந்து கொள்ளலாம்.

All Religions welcome. 100% Guaranteed Result

Remove Black Magic,Witchcraft, Obeya,Evil Spirits

Bad Luck &Jadoo & Give 100%,Life Long Protection

Open 7 days 10am -8pm

Name & Date of Birth - Horoscope
Hand Reading
Past, Present & Future
Overseas & Travel
Marriage, Family Matters
Husband -Wife Problems - Divorce
Children Education
Children Mistakes

Property, Court Problems
Face Reading
Love & Money Problems
Education & Work
sexual Problem
Jealousy & Black Magic
Health & Business
Evil affection

செய்வினை கோளாறா,
பேய் பிசாசு தொந்தரவா,
எதிரிகள் தொந்தரவா,
கண் திருஷ்டி, நாகதோசம்,
காதல் விவகாரங்கள்,
தொழில், மனை அபிவிருத்தி,
வாகனப் பொருத்தம்,
காதலர் ஒற்றுமை போன்றவற்றிற்கு
தீர்வு காண அழையுங்கள்.

www.shankaraguruji.com

647-763-5262

1415 Kennedy Road Unit #7, Scarborough, M1P 2L6

New Quality Bakery (upstair) Near Royal Bank (Kennedy& Ellesmear)

# இலங்கையின் ஆதிக் குடிகள் யார்? மகாவம்சம் என்ன சொல்கிறது?

நக்கீரன் - கனடா

### சிங்கள இனவாதம்

அநகாரிக தர்மபாலரைப் பின்பற்றியே பின்னாளில் எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்கா, ஏ. இ. குணசிங்கா, கோனார் இராசரத்தினா, மேத்தானந்தா, சிறில் மத்தியூ, ஜே. ஆர். ஜெயவர்த்தனா, டி. பி. விஜயதுங்க, சந்திரிகா குமாரதுங்கா போன்ற அரசியல்வாதிகள் ஸ்ரீலங்கா ஒரு பவுத்த நாடென்றும் நாடும் மக்களும் ஒன்றென்றும் எழுதியும் பேசியும் வந்தார்கள். இன்றும் பேசி வருகிறார்கள். இவர்களில் எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்கா, ஜே. ஆர். ஜெயவர்த்தனா போன்றோர் கிறித்தவர்களாக இருந்து பின்னர் பவுத்தர்களாக மதம் மாறிக் கொண்ட அரசியல் பவுத்தர்களாவர்.

*1920* இல் கொழும்பில் *1,000* மலையாளிகள் இருந்தார்கள். இவர்கள் ஆங்கிலேயரால் தங்களது தொழிற்சாலைகளில் பராமரிப்புத் தொழில் செய்வதற்குக் கொண்டு வரப்பட்டவர்கள். *1935* இல் மலையாளிகளது தொகை *35,000* ஆக உயர்ந்தது. பெரும்பாலும் கள் இறக்கல், துறைமுகம், தொடர்வண்டி திணைக்களம், தொழிற்சாலை, தேநீர் கடைகள், வீட்டு வேலை போன்ற தொழில்களில் ஈடுபட்டு இருந்தனர். இவர்களுக்கு எதிரான போராட்டத்துக்குத் தொழிற் சங்கவாதியாக இருந்த ஏ. இ. குணசிங்கா தலைமை தாங்கினார்.

மலையாளிகளது தேநீர்க் கடைகளைப் புறக்கணிக்க வேண்டும் என கொழும்பு நகரம் முழுதும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன. இதனை அடுத்து ஆயிரக்கணக்கான மலையாளிகள் நாட்டை விட்டு அமைதியாக வெளியேறினர். சிலர் தமிழ் அல்லது சிங்களப் பெண்களை மணந்து இலங்கையில் தங்கி விட்டனர். S. W. R. D. பண்டாரநாயக்காவின் முதல் அமைச்சரவையில் பவுத்த மத, கலாசார அமைச்சராக பதவி வகுத்தவர் இந்த மலையாளிகளில் ஒருவரான ஜெயவீர குருப்பு ஆவர்!

*1939* ஆம் ஆண்டு ஏ. இ. குணசிங்கா *15,000* தமிழர்களை இந்தியாவுக்கு நாடு கடத்த வேண்டும் எனக் கேட்டுச் சட்டசபையில் ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்தார். அதே ஆண்டு அண்மையில் அரச பணியில் சேர்ந்த தமிழர்களைப் பதவி நீக்கம் செய்ய வேண்டும் என்ற தீர்மானத்தை டி.எஸ். சேனநாயக்கா கொண்டு வந்தார்.

இலங்கையில் *1860* முதல் தோட்டத் தொழிலாளர் போராட்டம் நடத்திய போதும் *1899* இல் தொழிலாளர்களின் பொது வேலைநிறுத்தம் உருவாகி அதன் விளைவாகத் தொழிற்சங்கக் கட்டமைப்பு தோற்றம் பெற்ற போதிலும் *1920* இல் மட்டுமே இரண்டு விரிவான தொழிலாளர் அமைப்புகள் உருவாகின.

ஒன்று ஊடகவியலாளர் கே. நடேசய்யர் தலைமையில் உருவான இலங்கை இந்தியத் தொழிலாளர் சம்மேளனம் (Ceylon Indian Workers Federation) மற்றது ஏ. ஈ. குணசிங்கா தலைமையில் உருவான தொழிலாளர் சங்கம்.

*1925* இல் நடேசய்யர் தனது அமைப்பை குணசிங்காவினுடைய தொழிற் சங்கத்தோடு இணைத்தார். ஆனால் *1928* ஆம் ஆண்டளவில் குணசிங்கா இந்திய வம்சாவளித் தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிராகச் செயற்படத் தொடங்கினார். அதனால் நடேசய்யர் அந்த அமைப்பை விட்டு வெளியேறினார்.

### கூலி வேலைக்கு அழைத்துவரப்பட்ட மலையகத் தமிழர்

மலையகத் தமிழர் *1,800* முற்பகுதி தொடங்கி தமிழ்நாட்டில் இருந்து ஆங்கிலேயரால் கோப்பி, தேயிலை, இரப்பர் தோட்டங்களில் கூலி வேலை செய்ய ஒப்பந்தக் கூலிகளாக (indentured labour) அழைத்து வரப்பட்டவர்கள். இவர்கள் வெள்ளைத் துரைமார்களால் கூலிகள் என அழைக்கப்பட்டார்கள். தமிழில் இருந்து ஆங்கிலத்தில் நுழைந்த சில சொற்களில் இந்தக் கூலி என்ற சொல்லும் ஒன்று. மிகக் குறைந்த கூலி வாங்கிக் கொண்டு அதிக நேரம் தேயிலை, இரப்பர், காப்பித் தோட்டங்களில் வேலை செய்தார்கள். லயம் என்று சொல்லுகிற தகரக் கொட்டில்களில் வாழ நிர்ப்பந்திக்கப் பட்டார்கள். சமையல், சாப்பாடு. படுக்கை எல்லாம் இந்த லயத்தில்தான். இறந்த பின் இவர்களது உடல்கள் தோட்டங்களில் புதைக்கப்பட்டு தேயிலைச் செடிகளுக்கு உரம் ஆகின.

தமிழ்நாட்டில் இருந்து குடிபெயர்ந்த இவர்களது வாழ்க்கை மிகவும் சோகமானது. பயணம் செய்ய வேண்டிய நாளில் கையில் இரண்டொரு துணிமணியோடு வீட்டு வாசல்களில் காத்திருப்பார்கள். கங்காணிகள் இவர்களைக் கால் நடையாக இராமேஸ்வரம் வரையும் கூட்டி வருவார்கள். அதற்குப் பிறகு தோணிகளில் மன்னார் கொண்டு வரப்படுவார்கள். மன்னாரை அடைந்ததும் அங்கிருந்து பல மைல்களுக்கு அப்பாலுள்ள மத்திய, தென்பகுதி இடங்களுக்கு கால் நடையாகக் காடு, மலைகள் ஊடாக அழைத்துச் செல்லப்பட்டனர்.

இந்த நீண்ட, கரடு முரடான பயணத்தில் நாலில் ஒரு பகுதியினர் நோய் காரணமாக சாவை அணைத்துக் கொண்டார்கள். ஏழ்மையும் வறுமையுமே இந்த மக்களைத் தாம் பிறந்த தாய் நாட்டை விட்டு வெளியேறச் செய்தது. ஏழ்மைக்குக் காரணம் கல்வி இன்மையே. சமூக ஏணியின் கடைசிப் படியில் இருந்த இந்த மக்களை சமூகம் மக்களாகவே கணிக்கவில்லை. இந்து மதம் இவர்களைத் தீண்டாதார் என்று முத்திரை குத்திச் சேரிகளில் ஒதுக்கி வைத்தது. சாமி கும்பிடக் கூட இந்த மக்களுக்கு உரிமை இருக்கவில்லை. இன்று கூட தோட்டங்களில் வேலை செய்யும் தமிழர்கள் உலகத்தில் மிக மோசமாகச் சுரண்டப் படும் தொழிலாளர்களாக எண்ணப்படுகிறார்கள்.

*1827* இல் மட்டும் இலங்கையில் குடியேறிய மலையகத் தமிழர்களின் எண்ணிக்கை *10,000* ஆகும். இது *1877* இல் *1,46,000* ஆக உயர்ந்தது (இருபதாம் நூற்றாண்டின் நவீன அடிமைத்தனம், ஈழ ஆய்வு நிறுவனம்). *1946* குடிமக்கள் கணக்கெடுப்பின் போது மலையகத் தமிழர்களது எண்ணிக்கை *780,589* (*11.73* விழுக்காடு) ஆக உயர்ந்திருந்தது. இன்று (*2012*) *818,656* (*5.51* விழுக்காடு) ஆக உள்ளது.

ஏ. இ. குணசிங்கா தமிழ்த் தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிராகக் கிளர்ந்து எழுந்த போது இலங்கை முழுவதற்கும் ஒரேயொரு சட்டசபைப் பிரதிநிதியாக இருந்த சேர். பொன்னம்பலம் இராமநாதன் "இந்தியாவில் இருந்து *2,500* ஆண்டுகளுக்கு முன் காற்றின் வீச்சினால் தற்செயலாக இலங்கை வந்தடைந்த சிங்கள மக்கள் எப்படித் தோட்டத் தொழிலாளிகளைப் பார்த்து இந்தியனே வெளியேறு என்று கூறமுடியும்? தேளை, பாம்பைக் கொல்லாது துரத்தும் சிங்கள மக்கள் எப்படி மனம் வந்து இம் மலைநாட்டுத் தமிழரை வெளியேறச் சொல்ல முடியும்? இது புத்த நெறிக்கோ தருமத்திற்கோ ஒத்துப் போகுமா?" எனச் சட்டசபையில் வருத்தத்தோடு கேட்டார். தற்செயலாக இலங்கை வந்தடைந்த சிங்கள மக்கள் என சேர். பொன்னம்பலம் விளித்தது சொந்த நாட்டில் இருந்து துரத்தப்பட்டு இலங்கை வந்து சேர்ந்த விஜயனும் அவனது 700 நண்பர்களும் ஆவர்.

இவ்வாறு மலையகத் தமிழ்மக்கள் நலன் கருதி சிங்களச் சட்ட சபையில் குரல் கொடுத்தபோது இராமநாதனுக்கு அகவை 78 நிறைந்திருந்தது. (பக்கம்1791 சட்டமன்றப் பதிவேடு மூன்று-1928)

### சிங்கள மொழி

சிங்களம் ஓர் இந்தோ - ஆரிய குடும்பத்தைச் சார்ந்த மொழி என்றாலும் அதில் காணப்படும் சில அம்சங்கள் ஏனைய இந்தோ - ஆரிய குடும்பத்தைச் சார்ந்த குடும்ப மொழிகளில் காணப்படவில்லை. காரணம் சிங்களம் ஒன்று மட்டுமே இந்தியாவுக்கு வெளியே பேசப்படும் இந்தோ - ஆரிய மொழியாகும்.

சிங்களம் மற்றும் தமிழ் இரண்டுக்கும் இடையேயுள்ள ஒற்றுமைகளின் அடிப்படையில் சிங்களம் திராவிட குடும்பத்தைச் சேர்ந்த மொழி என்று கூறும் புலமையாளர்களும் இருக்கிறார்கள். சிங்கள புலமையாளர்களில் ஒருவரான டபுள்யூ. எவ். குணவர்த்தன தாம் எழுதிய சித்தாந்த பரிஸ்சானய என்ற நூலில் பின்வருமாறு கூறகிறார்.

"சிங்களமொழி இலக்கணத்தில் காணப்படும் முக்கிய அம்சங்கள் ஆரிய மொழி இலக்கணத்துக்கு மாறாக உள்ளன. சிங்கள மொழி இலக்கணத்தின் அடிப்படைக் கோட்பாடுகள் தமிழ்மொழியோடும் திராவிட மொழிவழக்கோடும் (idioms) ஒத்துப் போகின்றன. இதில் இருந்து நான் ஒரு முடிவுக்குக் கட்டாயமாக வரவேண்டியிருந்தது. அதாவது சிங்களத்தின் கட்டுமான அடித்தளம் திராவிடமாகவும் அதன் கட்டுமான மேல்தளம் அதாவது அதன் சொற்றொகுதி ஆரியமாகவும் காணப்படுகிறது என்பதுதான்." சிங்கள மொழியை இந்தோ - ஆரிய மொழிக் குடும்பத்துடன் இணைத்து மாக்ஸ்முல்லர் குறிப்பிட்டார். திராவிட மொழிக் குடும்பத்துக்குள் சிங்களம் வராது என கால்டுவெல் சொன்னார். இதனால் சிங்களம் ஒரு இந்தோ - ஆரிய மொழி என்ற கருதுகோளே மேலோங்கிக் காணப்படுகிறது.

மொழிகளைப் பற்றி ஆய்வு செய்யும் சமூக - மொழியியலாளர்கள் இரண்டு வெவ்வேறு மொழிகள் ஒன்றோடு ஒன்று தொடர்பு கொள்ளும் போது அவை பல வழிகளில் ஒன்றன் மீது ஒன்று செல்வாக்குச் செலுத்துகின்றன எனக் கூறுகிறார்கள். இதில் எந்த மொழி வல்லமை மற்றும் பெருமை படைத்ததோ அந்த மொழி அன்பளிப்புச் செய்யும் மொழியாகவும், இரண்டாவது மொழி அன்பளிப்பை வாங்கும் மொழியாகவும் மாறிவிடுகிறது. சிங்கள - தமிழ் ஊடாடத்தில் தமிழ் கொடுக்கும் மொழியாகவும் சிங்களம் அதனை வாங்கும் மொழியாகவும் இருக்கின்றன.

சிங்களத்தில் உள்ள தமிழ்ச் சொற்களை சிங்கள பாஷேவய தெமிள வாசன அகராதிய (A Glossary of Tamil Words in Sinhala) என்ற நூலில் தொகுத்துள்ளார்கள்.

தமிழ்மொழி சிங்களமொழியின் மீது செல்வாக்குச் செலுத்தியதற்கு முக்கிய காரணம் தமிழ்மொழி ஆட்சி அதிகாரம் மற்றும் உன்னதமான இடத்தைக் காலத்துக்குக் காலம் வகுத்தமையே.

*(தொடரும்)*

(14ம் பக்கத் தொடர்ச்சி)

யாவும் வழக்கம்போல நடைபெற்றன. கடவுளுக்குரிய கடமையில் இருந்து நாங்கள் தவறவில்லை என்று பத்துமலைக் கோயிலில் பணியாற்றும் அர்ச்சர்களில் ஒருவர் தெரிவித்தார்.ஆலய குருக்கள்கள், கணக்குப் பிள்ளை, மடப்பள்ளி பணியாளர்கள் உள்ளிட்ட அனைத்து சிப்பந்திகள், நிர்வாகப் பணியாளர்கள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினருக்கும் வழக்கம்போல ஊதியம் வழங்கப்பட்டதாக அவர்கள் தெரிவித்தனர்.

இருந்தபோதும், எந்த நேரமும் பக்தர்களின் வருகையுடன் பரபரப்பாக இயங்கிய எங்களின் வாழ்க்கை, பழைய நிலைக்கு எப்போது திரும்பும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம் என்ற எண்ணத்தையும் அவர்கள் ஏக்கத்துடன் உதயனிடம் இறக்கி வைத்தனர்.

பொதுமக்களிடம் பணப் புழக்கம் குறைவாக இருப்பதுடன், வேலை வாய்ப்புக் குறைவு, குழந்தைகளுக்கும் பெரியவர்களுக்கும் கட்டுப்பாடு, வெளிநாட்டு சுற்றுப்பயணிக்குத் தடை போன்ற காரணங்களால் பக்தப் பெருமக்களின் வருகை தற்போது மந்தமாக இருந்தாலும் எல்லாம் வல்ல திருமுருகனின் திருவருளால் எல்லாம் சரியாகிப் போகும் என்று பத்துமலைத் திருத்தலப் பணியாளர்கள் நம்பிக்கைத் தெரிவித்தனர்.

பத்துமலை திருத்தல வளாகத்தில் உணவகம் நடத்துவோர், பல்பொருள் அங்காடிக் கடைக்காரர்கள், பூசனைப் பொருள் விற்பனை நிலையத்தினர் யாவரும் ஒரு வித மிரட்சியுடனும் எதிர்கால நம்பிக்கையுடனும் காத்திருக்கின்றனர்.

மொத்தத்தில் எல்லோரின் உள்ளத்திலும் 'இப்படி எல்லாவற்றையும் புரட்டிப் போட்ட கொரோனா ஆட்கொல்லி கிருமிக்கு ஒரு முடிவுரை எழுதப் படாதா என்ற பொது நோக்கம்தான் அணையாத தீபம் போல மிளிர்கிறது. Nakkeeran 013-244 36 24

TRADITIONAL CHINESE ACUPUNTRE THERAPY CENTRE

எல்லாவிதமான வலிகளுக்கும்
ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை
மனத்தளர்ச்சி, தலைவலி,
நீரிழிவு நோய், வயிற்றுவலி,
மாதவிடாய் சம்மந்தமானவையும்
உடற்பருமன் குறைத்தல்

All Pain & Aches, Arthritis
Asthma, Sinusitis, Rhinitis Allergies
Stress, Migraine & All Types of Headaches
Diabetes, Gastric Pain, Ulcer
Menstruation
Weight Loss

முதலான சகலவிதமான நோய்களுக்கும்
Mrs. K. Vasanthakumar ஐ
தொடர்புகொள்ளவும்

Tel: (416) 754-4024

Member of College of Traditional Chinese Medicine Practitioners & Acupuncturists of Ontario. R.AC
D.Ac, M.A.C.F, M.Ac.A.M.A, M.CA.CA



3852 Finch Avenue East
Suite 302
Scarborough, ON
M1T 3T9



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி.வசந்தா நடராசன் B.A.,
416-332-0269 vasantha@rogers.com

# ஈழத்துத் திருக்கோவில்கள் 903



## செட்டிபாளையம் கண்ணகி அம்மன் கோயில்

### - மட்டக்களப்பு -

உயிர்கொல்லி நோயாய் உலகெங்கும் பரவியுள்ள கொரானா வைரசிலிருந்து தப்பி உயிர்வாழக் கையாள வேண்டியவை:

1. சமூக இடைவெளி
2. கைகளை அடிக்கடி கழுவுதல்
3. தேவையற்று வெளியே செல்லுதல்
4. அரசின் ஆணையை ஏற்று வீட்டில் இருப்பது

இந்த நான்கு நெறிமுறைகளுமே உயிர்களைப் பலிகொள்ளும் கொரானா என்ற கொடிய வைரசை ஒழிக்க உதவும் நடைமுறைகளாகும். இந்த நான்கு நடைமுறைகளையும் அனைவரும் பின்பற்றி நலமுடன் வாழ்வோம்.

நாமும் நலம்பெற்று, உலகமக்களும் நலமே வாழ, ஆத்மசுத்தியோடு இறைவனைப் பிரார்த்திப்போம். சிவவழிபாட்டிலே நோய் பிணி மற்றும் மரணத்தை வெல்லும் மந்திரமாக மகா ம்ருத்தும்ஜெய மந்திரம் கூறப்பட்டுள்ளது. இறைவனை வழிபடும்பொழுது தினமும் இந்த மந்திரத்தை ஒரு முறையோ அன்றி பலமுறையோ
காலை, மாலை வேளைகளில் கூறி, இந்த உலகத்தைப் பீடித்துள்ள நோய் பிணி நீங்கி அனைவரும் நலம்பெற்று வாழ வேண்டும் என்ற வேண்டுதலை முன்வைத்து, இறைவனை வழிபடவேண்டும். நிச்சயம் பலன் கிடைக்கும்.

**மகா ம்ருத்தும்ஜெய மந்திரம்**

**ஓம் த்ரியம்பகம் யஜாமஹே**
**ஸுகந்திம் புஷ்டி வர்த்தனம்**
**உர்வாருஹமிவ பந்தனாத்**
**ம்ருத்யோர் முஷ்ய மாம்ருதாத்''**
**ஓம் நமச்சிவாய ஓம்நமச்சிவாய ஓம்நமச்சிவாய.**

இவ்வாறான சடங்கு வழிபாட்டுமுறையிலிருந்து ஆகமமுறை தழுவிய வழிபாட்டுமுறைக்கு இவ்வாலய நடைமுறைகளை மாற்ற முயற்சிகள் எடுத்தபோதிலும், சிறுதெய்வ வழிபாடான கண்ணகி வழிபாட்டு முறைக்கு, ஆகமமுறை தழுவிய வழிபாட்டு முறை ஏற்றதல்ல என முடிவு செய்யப்பட்டு, சடங்கு முறையே நடைமுறையிலிருந்து வருகின்றது.

இவ்வாலயத்திலே காணப்படும் குளிர்த்திக் குரைச்சிக் காணிக்கை என்பது வேறு ஆலயங்களிலே காணப்படாத வழமையாகும். கண்ணகை அம்மனைக் குளிர்த்தி ஆட்டுவதற்குரிய பானகம் தயாரிக்கப்படும். பால், பழவகைகள், தேன், சர்க்கரை, சீனி, நெய் முதலானவை கொண்டு இப்பானகம் தயாரிக்கப்படும். இப்புனித பானகம் அடியார்களுக்கு வழங்கப்படும். இப்பானகத்தினைப் பெறுவோர் காணிக்கைப்பணத்தைச் சில்லறையாக பானகம் உள்ள பாத்திரத்தினுள் போடுவர். இதனையே குளிர்த்திக் குரைச்சிக் காணிக்கை என அழைப்பர்.

செட்டிபாளையம் கண்ணகை அம்மன் கோவிலுக்குரிய ஆதனங்களாகப் பல காணிகள் காணப்படுகின்றன. அத்தோடு காணி விற்பனை, உண்டியற் காணிக்கை, பிள்ளை விற்பனவு, மடிப்பிச்சைநெல், அடையாளக் காணிக்கை, நேர்த்திக் கடன்பொருட்கள், நேர்த்திக் கடனால் கிடைக்கும் ஆடு, மாடு, கோழி ஆகியவற்றின் பெறுமதி என நிறைந்த வருமானத்தை இக்கோவில் பெறுகின்றது. கண்ணகி அம்மனைத் தாயாகக் கருதி தமது குறைகளைத் தீர்க்கவேண்டியும், குறைகள் தீர்ந்து நிறைவு பெற்றோரும் நேர்த்திக் கடன்களை நிறைவேற்றுமுகமாகப் பல்வேறு அடையாளப் பொருட்களைக் கொடுக்கின்றனர். கண்மணி, கண்மடல், காற்படம், வயிறு, கை, கால், மார்பு, பிள்ளையும் தொட்டிலும், நாகபடம், நாகம், தந்தம் என்பன நேர்க்கடனால் கிடைக்கப்பெறும் பொருட்களாகும். இப்பொருட்கள் செம்பு, வெள்ளி, தங்கம் என்பவற்றால் அமையும். இவ்வாலயத்திலே காணப்படுகின்ற வெண்கல உடுக்கு அபூர்வமானதும், அற்புத சக்தி கொண்டதாகவும் காணப்படுகின்றது. இவ்வுடுக்கின் குற்றி வெண்கலத்தினால் வார்க்கப்பட்டுள்ளது. அது சுமார் ஒன்றரை அடி உயரமும், 9 அங்குல விட்டமும் கொண்டது. வாய் வளையமாக இரண்டு சிலம்புகள் அமைந்துள்ளன. குற்றியின் நடுவிலும் ஒரு சிலம்பு காணப்படுகின்றது. அத்தோடு பன்னிரண்டு சிறிய சிலம்புகளும் தொங்கவிடப்பட்டுள்ளன. உடுக்கு வைக்கும் யந்திரம் கீறப்பட்ட குற்றியிலே முறைப்படி இவ்வுடுக்கு வைக்கப்பட்ட பின்னர் இதில் எழும் ஓசை அதிசயமானதென்பர். இவ்வுடுக்கு ஆண்டிலே மூன்று தடவைகள் மட்டுமே அடிக்கப்படும். வருடாந்தச் சடங்கு நடக்கும் வேளையில், கலியாணச்சடங்கிலன்று மூன்றாம் மண்டபத்துள்ளும், பூரண கும்பச் சடங்கிலன்றும், திங்கட்கிழமை பகற்சடங்கிலன்றும், 4ஆம் மண்டபத்துள் கலியாணக்காலைச் சுற்றி அடிக்கப்படும். தீரா நோய்களும், பல்வினைகளும் இந்த உடுக்கின் அற்புத சக்தியால் நீங்கியுள்ளதாக அடியவர்கள் கூறுவர்.

செட்டிபாளையம் கண்ணகி அம்மன் கோயிலில் வருடாந்தச் சடங்கு ஆரம்பித்தால், ஊர்க்கட்டுப்பாட்டிற்கு அனைவரும் கட்டுபட்டு நடப்பது பாரம்பரியமாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. கண்ணகி அம்மனுடைய கதவு திறந்தால் மச்சம். மாமிசம் புசிப்பது, மதுபானம் குடிப்பது, மீன் பிடிக்கச் செல்வது முதலானவை நிறுத்தப்படும். அறுவடை, சூடறுப்பு நடைபெறமாட்டாது. மாவிடித்தல், மஞ்சள் அரைத்தல் ஆகியவை நடைபெறாது. திருமணம், பூப்பநீராட்டுவிழா என்பனவும் நடைபெறுவதில்லை. மரணச் சடங்குகள் மிக அமைதியாக, அடக்கமாக இடம்பெறும். ஊரெங்கும் புனிதம் பேணப்படும். இவ்வாறான ஒழுங்கு முறையை இவ்வூர் மக்கள் பயபக்தியுடன் கடைப்பிடிப்பர். செட்டிபாளையம் கண்ணகி அம்மன் கோயில், மக்களுடைய ஆன்மீக முன்னேற்றத்திற்கும், கலை கலாச்சார விழிப்பணர்வை ஏற்படுத்துவதிலும் பெரும்பங்கு வகித்து வருகின்றது. மரபுக்கலைகளான கூத்து, வசந்தன், கரகம், காவடியாட்டம் என்பனவும் இக்கோயிலின் செயற்பாடுகள்மூலம் பேணப்படுகின்றது. மடிப்பிச்சை மூலம் கிடைக்கும் நெல்லின் ஒரு பகுதியை மாணவர் இல்லம் மற்றும் அன்னதான சபைகளுக்குக் கொடுத்து உதவுகின்றனர்.

நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் அறிவிக்கும் நீதிகளுள் ஒன்றாகிய, "கற்புடை மகளிரை உயர்ந்தோர் போற்றிப் புகழ்வது இயல்பு" என்பதற்கிணங்க, கண்ணகியைத் தெய்வமாகப்போற்றி வணங்கும் மரபு காணப்படுகின்றது. வீரபத்தினியாகிய கண்ணகி நிதி கேட்டு நின்ற வேளையிலும், "பட்டாங்கு யானும் ஓர் பத்தினியே ஆமாகில் ஒட்டேன் அரசோடு ஒழிப்பேன் மதுரையும்.." என வஞ்சினம் கொண்டு சூளுரைத்த வேளையிலும், தாய்மைக்கே உரிய கனிவோடு, மதுரையை அழிக்க ஓங்கி உயர்ந்த தீச்சுவாலைகளை நோக்கி,

"பார்ப்பார். அறவோர், பசு, பத்தினிப்பெண்டிர்
மூத்தோர், குழவி எனும் இவரைக் கைவிட்டு
தீத்திறத்தோர் பக்கமே சேர்க" என்று

வஞ்சினத்திலும் கருணைவடிவமாக, நீதி பேணிய தாயாக விளங்கியவள் கண்ணகி. அத் தாயைப் பல்வேறு இனத்தவர்களும், நாட்டவர்களும் தமக்கே உரிய சடங்குமுறைகளோடு போற்றி வழிபாடியற்றி வருகின்றனர். வீரபத்தினியாகிய கண்ணகி, தனக்குச் சிலைநாட்டிச் சிறப்புச் செய்த மன்னனை, "செங்குட்டுவன் நீடூழி வாழ்க" என்று போற்றிய கருணையுடையவள். இவ்வாறான கருணைத்தெய்வம், தன்னைத் தாயாக எண்ணி வணங்குவோர்க்கு சகல வளங்களையும் நல்குவாள் என்பதில் ஐயமில்லை.

*வளரும்...*



கே.ரி. சண்முகராஜா எழுதும்

# #2 சிவாஜி கணேசனும் தமிழ்ச் சினிமாவும்

அன்பாக கனடா உதயன் வாசகர்களுக்கு!

இந்தத் தொடரில், தமிழ் மக்களின் வாழ்க்கை முறையில் பல்வேறு நிலைகளில் அவர்தம் வாழ்வின் கலை, கலாச்சார, பண்பாட்டுக் குறியீடு தமிழ்த் திரையுலகில் நடிகர் திலகம் ஒருவர் மட்டும் தான் என்பதை எடுத்துக் காட்டுவதே எனது நோக்கமாகும்.

வீணைமைந்தன்

----------------------------------

எனக்குப் பத்து வயதாகவிருக்கும் போது, 1952ல், திரைக்கு வந்த சிவாஜி அவர்களின் முதலாவது படமான "பராசக்தி" யை சங்கானை என்னும் ஊரில், முதற் தடவையாகப் பார்த்தேன், பிரமித்தேன். இற்றைவரை நூறு தடவைகளாவது பார்த்திருப்பேன்.

சிவாஜி அவர்களின் குணசித்திர நடிப்பும் கலைஞர் மு.க. அவர்களின் உரையாடலுமே அதற்கான முதற் காரணம்.

"பராசக்தி" படத்தில் சிவாஜி அவர்களை நடிக்க வைத்து சுடப்பட்ட முதல் காட்சி பலருக்கு தெரியாதிருக்கலாம்.



சக்ஸஸ் (SuCess) – வெற்றி என்னும் பொருளுடைய வார்த்தையே அவரது தொழில் வெற்றியின் முதல் சொல்லாகும். இதுதான் அந்தக் காட்சி.

வீதியில் குழாயடி. அங்கே சிகரெட் பிடித்துக் கொண்டு போகின்றான் ஒருவன். குணசேகரன் (சிவாஜி) வருகின்றான். கலைந்திருந்த தலை, கசங்கிய ஆடை, பிடிப்பவனின் முதுகில் ஓங்கி அறைகின்றான் குணசேகரன். திடுக்கிட்டுப் பார்க்கின்றான் அவன். "சிகரட் பிளீஸ்" என்று குணசேகரன் கேட்க "ஐயோ பாவம், பைத்தியம் போல இருக்கு" என்று நினைத்து சிகரட்டை எடுத்துக் கொடுக்கின்றான். அதை வாங்கிக் கொண்ட குணசேகரன் (சிவாஜி) "சக்ஸஸ்" என்று சொல்லிக் குதூகலித்துக் குரலெழுப்புகின்றான்.

முதலாவது படத்தின் முதல் காட்சி சிவாஜியை வைத்து இப்படித்தான் படமாக்கப்பட்டது. அன்றுரைத்த வெற்றி என்னும் சொல், அவரது வாழ்க்கை முழுவதும் வெற்றியாக அமைய, அவரது திரைக் கதைக் களங்கள் முக்கிய காரணிகளாயின.

தமிழ்ச் சமூகத்தின் குடும்ப அங்கத்தினர்களுள் ஒருவராகவே அவரை மக்கள் அவரைக் கொண்டாடினர். அதிலும் அவர் ஏற்று நடித்த "அண்ணன்" பாத்திரங்கள் என்றும் மறக்க முடியாதவை.

பராசக்தியில் அண்ணன் குணசேகரன் இரண்டாவது உலக யுத்தத்தில் (பர்மா) ரங்கூனிலிருந்து, தங்கை கல்யாணியின் திருமணக் காட்சியை கண்டு களிக்க வந்த ஒருவராகிய குணசேகரன் கொண்டு வந்த சீர்வரிசை யாவற்றையும் மோசக்காரி ஒருத்தியிடம் பறி கொடுத்துவிட்டு பஞ்சையாய் பராரியாய் பைத்தியக்காரன் போல் தெருவெங்கும் அலைந்து திரிந்தான்.

தமிழ்க் குடும்பங்களின் தங்கைகளுக்கு தனயன் எவ்வளவு முக்கியம் என்பதை உணர்த்தும் காட்சிகள் கண்ணீரை வரவழைக்கும். புலம் பெயர்ந்த நாடுகளில் எத்தனையோ அண்ணன்மார்கள் தங்களது சகோதரிகளின் நல்வாழ்வுக்கு எப்படியெல்லாமோ உழைப்பதையும், கஸ்டப்பட்டதையும் நாம் பார்த்திருக்கின்றோம்.

நமது "பராசக்தி" நாயகன் குணசேகரன் தன் தங்கை கல்யாணியை நினைத்து "கல்யாணி! நீ மதுரையிலே, நான் மதராஸ் தெருவினிலே மாறாத மனக் குழப்பத்துடன் அனாதையாக யாருடனும் எதுவும் சொல்ல முடியாத ஊமையாக..." கல்யாணி, உன் ஆசைக் கனவை நான் அழிக்க வேண்டாம். இந்த பைத்தியக்கார வேடத்தில் நீ என்னைத் தெரிந்து கொள்ளவே வேண்டாம்: என அண்ணன் குணசேகரன் புலம்பிக் கொண்டிருக்கும் போது, தங்கை கல்யாணியோ விதவையாகி, ஏழ்மையில் வாடியபடி குழந்தையை ஏணையில் தூங்க வைத்துப் பாடும் தாலாட்டுப் பாடல் எமது தமிழ்க் குடும்பங்களின் தாய் மாமனது பங்கினையும் தியாகத்தையும் பாசத்தையும் நினைவூட்டிகிறது.

"மாமன்மார் மூவர் தம்பி  
நலல வாழ்வளிக்க வருவார் - உன்  
மாம்பழக் கன்னத்திலே முத்தமாரி  
பொழிந்திட வருவார்  
மாணிக்கப் பாவாடை பச்சை  
மாமணித் தொட்டிலுடன் வெள்ளை  
யானையும் வாகனமாய் மாமன்  
தருவார் சீதனமாய்  
வெள்ளியினால் செய்த ஏட்டில்  
நல்ல வைர எழுத்தாணி கொண்டு  
தெள்ளு தமிழ்ப் பாடம் சொல்ல - உன்னை  
பள்ளியில் சேர்த்திட வருவார்  
அள்ளி அணைத்திட வருவார் . கண்ணே!  
கண்மணியே கண் உறங்காயோ

என்னும் தாலாட்டுப் பாடல்கள் ஒலிப்பது இன்றும் வாழும் அண்ணன்மார்களின் காதுகளில் ஒலிக்கின்றது.

புகழுடைத்த "தமிழ்த் திரைப்பட வரலாறு" என்கிற நூலில் பிரபல தமிழ்த்திரைப்படத் தயாரிப்பாளரும், இயக்குனருமாகிய முக்தா பிலிம்ஸ் வி. சீன்வாசன், இவ்வாறு எழுதுகின்றார், "நான் பாக்கியசாலி, நான் கொடுத்து வைத்தவன், நான் ஆண்டவனால் ஆசிர்வதிக்கப்பட்டவன், எதனால் இதைச் சொல்லுகின்றேன் என்றால், அந்த மகோன்னதமான நடிகனின் படங்களை நான் அதிகளவில் இயக்கியுள்ளேன். என்னுடைய 46 ஆண்டுகால சினிமா வாழ்வில் சிவாஜியை வைத்து அதிகமாகப் படம் எடுத்தவர்கள் நானும் தயாரிப்பாளர், நடிகர் பாலாஜியும் தான். பிள்ளைப்பாசம், சகோதரப்பாசம், நண்பனின் பாசம், என இந்த மண்ணின் சிறப்புக்குரிய குணமாகிய பாச உணர்வு அனைத்திற்கும் தன் நடிப்பால் உருவம் கொடுத்தவர் சிவாஜி கணேசன் மட்டுமே" என்று குறிப்பிடுகின்றார்.

சிவாஜி அவர்களின் முதற்படமாகிய "பராசக்தி"யில் தங்கை கல்யாணியின் அண்ணனாக நடித்துப் பார்த்தவர்கள் யாவரினதும் உடன் பிறவாச் சகோதரனாக உயர்ந்த குணசேகரன் போன்று, பாசமலர், தங்கை, தங்கைக்காக, அண்ணன் ஒரு கோயில், அன்புக் கரங்கள், லட்சுமி கல்யாணம், பந்தபாசம், படித்தால் மட்டும் போதுமா?, பச்சை விளக்கு, விடிவெள்ளி ஆகிய படங்களில் அண்ணனாகவும் இளைய சகோதரனாகவும் பாத்திரமேற்று, சகோதர பாசத்திற்காக ஏங்குபவர் நெஞ்சங்களில் எல்லாம் நீங்கா இடம் பிடித்த பெருமை சிவாஜி அவர்களுக்கே உரியது.

அதிலும் குறிப்பாக "பாசமலர்" அண்ணனை எவருமே மறந்திருக்க மாட்டார்கள். எங்களுக்கு இப்படியொரு அண்ணன் கிட்டவில்லையே என ஏங்கிய தங்கைகள் ஏராளம், ஏராளம்!. நீங்கள், என்ன பாசமலர் அண்ணன்-தங்கையோ எனப் பேசும் அளவிற்கு பிரபலமான பாத்திரங்கள் ஆனார்கள் அந்த அண்ணனும் தங்கையும்.

பராசக்தி திரைப்படத்தின் மூலம் திரையுலகில் அறிமுகமானதிலிருந்தே விழுப்புரம் கணேசமூர்த்தி என்ற வி. சி. கணேசன், சிவாஜி கணேசன் ஆக அறியப்பட்ட காலத்திலிருந்து, தமிழ்ச் சகோதரர்கள், தாய்மார்கள் ஆகியோர்க்கிடையே ஒரு பாசவலை பின்னப்பட்டு விட்டது என்றே கூற வேண்டும்.

எப்படி கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் திரைக் கதை அமைத்து வசனம் எழுதிய பெரும்பாலான திரைப்படங்களில் பெண்ணுரிமைக்காக வாதாடியும் பெண்களைச் சமுதாயத்தில் உயர்ந்தவர்களாகக் காட்டும் காட்சிகளும் கருப்பொருளும் கையாளப்பட்டதோ, அவ்விதமே, நடிகர் திலகம் எடுத்துக் கொண்ட பெரும்பாலான கதாபாத்திரங்கள் "தாய்க் குலத்தின்" காப்பாளனாக, பண்புள்ள சகோதரனாக, உயர்ந்த கணவனாக, சிறந்த குடும்பச் சகோதரனாக சித்தரிக்கப்பட்டிருந்தமையை நாம் அவதானிக்கின்றோம்.



சிவாஜி போன்ற அண்ணனாக எங்களுக்கோர் "அண்ணா" வேண்டும் என்று சகோதரிகள் "பராசக்தி" மற்றும் "பாசமலர்" மூலம் உதாரண புருசரை அடையாளம் கண்டு கொண்டார்கள். அதனால் தான் குடும்பப் பாங்கான பாத்திரப் படைப்புக்களை அவர் ஏற்று நடிக்கும் போது, இரசிகர்களை நெஞ்சுருக வைக்கின்றார், நெஞ்சம் விம்மி அழ வைக்கின்றார்.

பாசத் தமிழ் என்று புதிய இலக்கணம் வகுத்த பாசமலர் திரைப்படத்தில் ஆரூர்தாஸ் அவர்களால் தீட்டப் பெற்ற வசனங்கள், இன்னும் பாசத்தைப் பொழிவனவாகும். இத்திரைப்படத்தின் மூலம்தான், முதன்முதலாக ஆரூரான் அவர்கள் சிவாஜி படங்களுக்கு வசனகர்த்தாவாக அறிமுகமானார்.

"பாசமலர்" படத்தில் ஒரு காட்சி. அண்ணன் சிவாஜி தங்கை ராதாவிற்கு (சாவித்திரி) பால்கொண்டு வருவார். தங்கை தூங்கிவிடுவார். "ராதா! அம்மாடி தூங்கிட்டியா?" என்று சொல்லி தங்கையின் எதிர்காலம் பற்றிய மலர்களைப் போல் தங்கை உறங்கும் தங்கையைப் பார்த்துக் கனவு காண்பார். அம்மாடி என்று அவர் தங்கையை அழைக்கும் அந்த நெகிழ்வு, பாசக் குரல், உயிர்த்துடிப்பு ஆகியன மிகுந்த இரத்தபாசம், இன்றுவரை எந்த நடிகர்களாலும் இந்த ஒரு சொல் மூலம் அந்த பாச உணர்ச்சியைக் கொண்டு வரமுடியவில்லை.

இது போன்று பல இடங்களை "பாசமலர்" திரைப்படத்தில் என்னால் காட்சிப்படுத்த முடியும்.

------------------------------- காட்சிகள் அடுத்த வாரம் விரியும் ---------------------------

# அமெரிக்காவின் உண்மையான கொரோனா இறப்பு மிக அதிகம் என ஆய்வொன்று தெரிவிக்கின்றது

கொரோனாவின் உண்மையான இறப்பு எண்ணிக்கையை அமெரிக்கா 28 சதவீதம் வரை குறைத்து மதிப்பிடக்கூடும் என்று யேல் பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சி குழு கூறியுள்ளது.

மார்ச் ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் அமெரிக்காவில் மொத்தம் 781 000 இறப்புகள் ஏற்பட்டுள்ளதாக அந்த குழு தெரிவித்துள்ளது. இது அதே காலகட்டத்தில் சராசரியை விட 122300 அதிகம்.

அதிகாரப்பூர்வ தகவல்களின்படி அந்த நேரத்தில் அமெரிக்காவில் 95 235 கொரோனா இறப்புகள் பதிவாகியிருந்தன.

அனைத்து காரணங்களாலும் அல்லது நிமோனியா மற்றும் இன்ஃப்ளூயன்ஸா போன்ற குறிப்பிடப்படாத விளைவுகளுக்கு காரணமான இறப்புகளில் விவரிக்கப்படாத அதிகரிப்புகளை மதிப்பிடுவது கொரோனாவின் பாதிப்பு குறித்த முழுமையான விவரத்தை அளிக்கும் என்று ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இறப்பு பற்றிய தகவல்கள் மாநிலங்களுக்கிடையில் கணிசமாக வேறுபடுகின்றன மேலும் சில இறப்புகள்ஊரடங்குஅல்லதுமக்கள்மருத்துவமனைகளுக்குச் செல்ல பயப்படுவதால் ஏற்படும் இரண்டாம் நிலை விளைவுகள் காரணமாக இருக்கலாம் என்று அவர்கள் கூறினர்.

இந்த புள்ளிவிவரங்கள் ஒரு மதிப்பீடு மட்டுமே என்று அவர்கள் கூறினர். ஆனால் உத்தியோகபூர்வ கணக்கீடு கொரோனா வைரஸ் காரணமாக இறப்பதைக் குறைத்து மதிப்பிடக்கூடும் என்று முடிவு செய்தனர்.

அமெரிக்காவில் கொரோனா உறுதி செய்யப்பட்டோர் எண்ணிக்கை 2778500 ஆக உயர்ந்து உள்ளது. வைரஸால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 130789 ஆக உயர்ந்து உள்ளது.

# அன்பின் தொனி - 567

பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)

**ஜெபத்தின் வல்லமை.**

## என் தேவனை நோக்கி அபயமிட்டேன்

என் பெலனாகிய கர்த்தாவே, உம்மில் அன்புகூருவேன். கர்த்தர் என் கன்மலையும், என் கோட்டையும், என் இரட்சகரும் என் தேவனும், நான் நம்பியிருக்கிற என் துருகமும், என் கேடகமும், என் இரட்சணியக் கொம்பும், என் உயர்ந்த அடைக் கலமுமாயிருக்கிறார். துதிக்குப் பாத்திரராகிய கர்த்தரை நோக்கிக் கூப்பிடுவேன், அதனால் என் சத்துருக்களுக்கு நீங்க லாகி இரட்சிக்கப்படுவேன். மரணக்கட்டுகள் என்னைச் சுற்றிக்கொண்டது, துர்ச்சனப்பிரவாகம் என்னைப் பயப்படுத்தினது. பாதாளக்கட்டுகள் என்னைச் சூழ்ந்துகொண்டது, மரணக்கண்ணிகள் என்மேல் விழுந்தது. எனக்கு உண்டான நெருக்கத்திலே கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டு, என் தேவனை நோக்கி அபயமிட்டேன், தமது ஆலயத்திலிருந்து என் சத்தத்தைக் கேட்டார், என் கூப்பிடுதல் அவர் சந்நிதியில் போய், அவர் செவிகளில் ஏறிற்று. அப்பொழுது பூமி அசைந்து அதிர்ந்தது, அவர் கோபங்கொண்டபடியால் பர்வதங்களின் அஸ்திபாரங்கள் குலுங்கி அசைந்தது. அவர் நாசியிலிருந்து புகை எழும் பிற்று, அவர் வாயிலிருந்து பட்சிக்கிற அக்கினி புறப்பட்டது, அதனால் தழல்மூண்டது. வானங்களைத் தாழ்த்தி இறங்கினார், அவர் பாதங்களின்கீழ் காரிருள் இருந்தது. கேருபீன்மேல் ஏறி வேகமாய்ச் சென்றார், காற்றின் செட்டைகளைக் கொண்டு பறந்தார். இருளைத் தமக்கு மறைவிடமாக்கினார், கரும்புனல்களையும், ஆகாயத்துக் கார்மேகங்களையும் தம்மைச் சூழக்கூடாரமாக்கினார். அவருடைய சந்நிதிப் பிரகாசத்தினால் அவருடைய மேகங்கள் பறந்து விலகிற்று, கல்மழையும் நெருப்புத்தழலும் விழுந்தது. கர்த்தர் வானங்களிலே குமுறினார், உன்னதமானவர் தமது சத்தத்தைத் தொனிக்கப்பண்ணினார், கல் மழையும் நெருப்புத்தழலும் விழுந்தது. தம்முடைய அம்புகளை எய்து, அவர்களைச் சிதறடித்தார், மின்னல்களைப் பிரயோகித்து, அவர்களைக் கலங்கப்பண்ணினார். அப்பொழுது கர்த்தாவே, உம்முடைய கண்டிதத்தினாலும் உம்முடைய நாசியின் சுவாசக்காற்றினாலும் தண்ணீர்களின் மதகுகள் திறவுண்டு, பூதலத்தின் அஸ்திபாரங்கள் காணப்பட்டது. உயரத்திலிருந்து அவர் கைநீட்டி, என்னைப் பிடித்து, ஜலப்பிரவாகத்திலிருக்கிற என்னைத் தூக்கிவிட்டார்.
**- சங்கீதம் 18: 1-16**

## கர்த்தரோ எனக்கு ஆதரவாயிருந்தார்

என்னிலும் அதிக பலவான்களாயிருந்த என் பலத்த சத்துருவுக்கும் என்னைப் பகைக்கிறவர்களுக்கும் என்னை விடுவித் தார். என் ஆபத்துநாளில் எனக்கு எதிரிட்டு வந்தார்கள், கர்த்தரோ எனக்கு ஆதரவாயிருந்தார். அவர் விசாலமான இடத்திலே என்னைக் கொண்டுவந்து, என்மேல் பிரியமாயிருந்த-படியால், என்னைத் தப்புவித்தார். கர்த்தர் என் நீதிக்குத் தக்கதாக எனக்குப் பதிலளித்தார், என் கைகளின் சுத்தத்திற்குத்தக்கதாக எனக்குச் சரிக்கட்டினார். கர்த்தருடைய வழி களைக் கைக்கொண்டுவந்தேன், நான் என் தேவனுக்குத் துரோகம்பண்ணினதில்லை. அவருடைய நியாயங்களை யெல்லாம் எனக்கு முன்பாக நிறுத்தினேன், அவருடைய பிரமாணங்களை நான் தள்ளிப்போடவில்லை. அவர் முன்பாக நான் மனவுண்மையாயிருந்து, என் துர்க்குணத்துக்கு என்னை விலக்கிக்காத்துக்கொண்டேன். ஆகையால் கர்த்தர் என் நீதிக்கும், தம்முடைய கண்களுக்கு முன்னிருக்கிற என் கைகளின் சுத்தத்திற்கும் தக்கதாக எனக்குப் பலனளித்தார். தயவுள்ளவனுக்கு நீர் தயவுள்ளவராகவும், உத்தமனுக்கு நீர் உத்தமராகவும், புனிதனுக்கு நீர் புனிதராகவும், மாறு பாடுள்ளவனுக்கு நீர் மாறுபடுகிறவராகவும் தோன்றுவீர். தேவரீர் சிறுமைப்பட்ட ஜனத்தை இரட்சிப்பீர், மேட்டிமையான கண்களைத் தாழ்த்து வீர். தேவரீர் என் விளக்கை ஏற்றுவீர், என் தேவனாகிய கர்த்தர் என் இருளை வெளிச்சமாக்குவார். உம்மாலே நான் ஒரு சேனைக்குள் பாய்ந்துபோவேன், என் தேவனாலே ஒரு மதிலைத் தாண்டுவேன். தேவனுடைய வழி உத்தமமானது, கர்த்தருடைய வசனம் புடமிடப்பட்டது, தம்மை நம்புகிற அனைவருக்கும் அவர் கேடகமாயிருக்கிறார். **- சங்கீதம் 18: 17-30**

## கர்த்தர் ஜீவனுள்ளவர் என் கன்மலையானவர்

கர்த்தரையல்லாமல் தேவன் யார்? நம்முடைய தேவனையன்றிக் கன்மலையும் யார்? என்னைப் பலத்தால் இடைகட்டி, என் வழியைச் செவ்வைப்படுத்துகிறவர் தேவனே. அவர் என் கால்களை மான்களுடைய கால்களைப்போலாக்கி, என்னுடைய உயர்தலங்களில் என்னை நிறுத்துகிறார். வெண்கல வில்லும் என் புயங்களால் வளையும்படி, என் கைகளை யுத்தத் திற்குப் பழக்குவிக்கிறார். உம்முடைய இரட்சிப்பின் கேடகத்தையும் எனக்குத் தந்தீர், உம்முடைய வலதுகரம் என்னைத் தாங்குகிறது, உம்முடைய காருணியம் என்னைப் பெரியவனாக்கும். என் கால்கள் வழுவாதபடிக்கு, நான் நடக்கிற வழியை அகலமாக்கினீர். என் சத்துருக்களைப் பின் தொடர்ந்து, அவர்களைப் பிடிப்பேன், அவர்களை நிர்மூலமாக்கும் வரைக்கும் திரும்பேன். அவர்கள் எழுந்திருக்கமாட்டாதபடிக்கு, என் பாதங்களின்கீழ் விழத்தக்கதாக அவர்களை வெட்டினேன். யுத்தத்திற்கு நீர் என்னைப் பலத்தால் இடைகட்டி, என்மேல் எழும்பினவர்களை என் கீழ் மடங்கப்பண்ணினீர். நான் என் பகைஞரைச் சங்கரிக்கும்படியாக, என் சத்துருக்களின் பிடரியை எனக்கு ஒப்புக்கொடுத்தீர். அவர்கள் கூப்பிடுகிறார்கள், அவர்களை இரட்சிப்பார் ஒருவருமில்லை; கர்த்தரை நோக்கிக் கூப்பிடுகிறார்கள், அவர்களுக்கு அவர் உத்தரவு கொடுக் கிறதில்லை. நான் அவர்களைக் காற்றுமுகத்திலே பறக்கிற தூளாக இடித்து, தெருக்களிலுள்ள சேற்றைப்போல் அவர்களை எறிந்துபோடுகிறேன். ஜனங்களின் சண்டைகளுக்கு நீர் என்னைத் தப்புவித்து, ஜாதிகளுக்கு என்னைத் தலைவனாக்குகிறீர், நான் அறியாத ஜனங்கள் என்னைச் சேவிக்கிறார்கள். அவர்கள் என் சத்தத்தைக் கேட்டவுடனே எனக்குக் கீழ்ப்படி கிறார்கள், அந்நியரும் எனக்கு இச்சகம்பேசி அடங்குகிறார்கள். அந்நியர் முனைவிழுந்துபோய், தங்கள் அரண்களிலிருந்து தத்தளிப்பாய்ப் புறப்படுகிறார்கள். கர்த்தர் ஜீவனுள்ளவர், என் கன்மலையானவர் துதிக்கப்படுவாராக, என் இரட்சிப்பின் தேவன் உயர்ந்திருப்பாராக. அவர் எனக்காகப் பழிக்குப் பழிவாங்கி, ஜனங்களை எனக்குக் கீழ்ப்படுத்துகிற தேவனானவர். அவரே என் சத்துருக்களுக்கு என்னை விலக்கி விடுவிக்கிறவர், எனக்கு விரோதமாய் எழும்புகிறவர்கள்மேல் என்னை நீர் உயர்த்தி, கொடுமையான மனுஷனுக்கு என்னைத் தப்புவிக்கிறீர். இதினிமித்தம் கர்த்தாவே, ஜாதிகளுக்குள்ளே உம்மைத் துதித்து, உம்முடைய நாமத்திற்குச் சங்கீதம் பாடுவேன். தாம் ஏற்படுத்தின ராஜாவுக்கு மகத்தான இரட்சிப்பை அளித்து, தாம் அபிஷேகம்பண்ணின தாவீதுக்கும் அவன் சந்ததிக்கும் சதாகாலமும் கிருபை செய்கிறார். **- சங்கீதம் - 18: 31-50**

*தொடரும்...*

SIVA SAKTI ASTROLOGY PSYCHIC CENTER



INDIAN ASTROLOGER & PSYCHIC



Most Powerful Spiritual Healer
We can Handle any Problem
25 வருடங்கள் அனுபவமுள்ள மற்றும் 8 தலைமுறைகளாக ஜோதிடம் பார்பவர்
உலகத்தில் சூரிய சந்திர நவக்கிரக மகிமையினாலே
இன்ப துன்பங்கள், நன்மை தீமை பற்றி விபரம் கூறுவார்
Remove Black Magic,Witchcraft, Obeya,Evil Spirits
Bad Luck & Jadoo & Give 100%,Life Long Protection
கை பார்த்து. முகம் பார்த்து அருள்வாக்கு சொல்லப்படும். Photo பார்த்து
ஜாதகம் பார்த்து, குறிப்புப் பார்த்து ஆரோக்கியம், மனநிம்மதி, லக்ஷ்மி கடாட்சம் கிடைக்கவும்,
இராசி, நட்சத்திரம் பார்த்து நடந்தது, நடப்பது, நடக்கப்போவது பற்றிச் சொல்லப்படும்.
செய்வினை கோளாறு, பேய்பிசாசு தொந்தரவா, எதிரிகள் தொந்தரவா, கண் திருஷ்டி,
நாகதோசம், காதல் விவகாரங்கள், தொழில், மனை அபிவிருத்தி, வாகனப் பொருத்தம்,
காதலர் ஒற்றுமை போன்றவற்றிற்கும், வேறு பிரச்சனைகளுக்கும் உடனடியாக
தீர்வு சொல்லப்படும்
எந்தப் பிரச்னையாக இருந்தாலும் 9 நாட்களில் தீர்வு காண்பார்
100% SATISFACTION GUARANTEED
Are you depressed & Lonely? All Religions welcome. 100% Guaranteed Result

Master: YOGAN R.K.
416-303-8949
6012 A, Yonge St, #201,
North York ON M2M 3V9

Pandit: KUMAR SWAMY
416-726-4474
2649 Eglinton Ave East,
Scarborough ON, M1K 2S2

# Carefirst Family Health Team

## Accepting New Patients



## புதிய நோயாளர்கள் ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள்

- தமிழ் பேசும் வைத்தியர்கள்
- ஒன்ராறியோ வைத்திய அட்டை வைத்திருப்பவர்களுக்கும் அகதி விண்ணப்பம் சமர்ப்பித்தவர்களுக்கும் இச் சேவை வழங்கப்படும்.
- குடும்ப வைத்தியர்கள், தாதிமார்கள், உணவு நிபுணர்கள் மற்றும் ஊழியர்கள் உங்கள் மொழி பேசுவார்கள்.
- அதே நாள் குறுகிய நேரக் காத்திருப்பு. அடுத்த நாள் நியமனங்கள்
- அலுவலக நேரத்திற்குப் பின்பும் சேவை வழங்கப்படும்
- நீரிழிவு கல்வி திட்டம்

Ontario

**Clinic Location:**
**Carefirst One-Stop Multi Services Centre**
300 Silver Star Blvd., 2/F,Scarborough, ON M1V 0G2
Tel: (416) 502-2029, www.carefirstfht.com





# முதலாம் ஆண்டு நினைவாஞ்சலி



அமரத்துவமாது.
அம்பலவாணர் பராசக்தி

பிறப்பு 16-04-1935
இறப்பு 15-7-2019

சுருவில் ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும். பிரப்பங்குளம் வீதி யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட திருமதி. அம்பலவாணர் பராசக்தி அவர்களின் ஓர் ஆண்டு நினைவாஞ்சலி

நீண்ட பெருவெளியில்
நிற்கதியாய் நிற்பதுபோல்
மீண்டும் ஒரு பிறப்பாய்
காண்பதற்கு ஏங்குகிறோம்
வாழ்ந்து மடிதல் வழக்கேதான் ஆயிடினும் நாம்
வணங்குகின்ற தெய்வம்
மறைந்ததன்றோ ஆதலினால்
ஆண்டொன்று ஆகியும்
ஆறவில்லை எம் துயரம்
அம்மா
பொறுமையின் பொக்கிஷமே
எங்கள் பெருமைகளின் பிறப்பிடமே
வறுமை சென்று விட்டதம்மா ஆனாலும் நீங்களின்றி
வெறுமை குடிகொண்டதம்மா
மறுமையென ஒன்றிருந்தால் எமக்கு மறுபடியும்
தாயாகமாட்டீரோ.சுருவிலுறை நாகம்மாள்
உமக்கு துணையிருக்க வேண்டுகிறோம்.

தகவல்: குடும்பத்தினர்
647-530-7174

www.uthayannews.ca

இவ்விடத்தில் விளம்பரம் செய்ய
எம்மை அழையுங்கள்
416-752-1524

TRAFFIC TICKETS!
Careless Driving, Speeding, Accidents, Red lights, Stop sign, Seat Belts, Fail to Remain / Stop at the Scene, Stunt Driving (Racing), No Insurance Etc....
Peter Joseph
Legal Representative / Paralegal
416-757-7707
Cell : 416-575-8797
Fax : 1-866-516 0689
E-mail: legalservice.pj@gmail.com



வீடு வாங்க விற்க
Vijay Muthumani
Sales Representative
HomeLife Today Realty Ltd., Brokerage*
*Independently Owned and Operated
Off: 416-298-3200
Dir 647-963-0705



23rd Years in Publishing

UTHAYAN
உதயன்
திக்கெட்டும் தமிழ் உலகில் எதிரொலிக்கும் தமிழ் ஏடு

Tel : 416-752-1524
Fax: 416-752-6703

NEW CLASS STARTING
On12th October 2019
Income Tax
Bookkeeping
(QuickBooks)
Sree
416.438.3350
Seyon Financial Services



ONLY LOCATION IN GTA
OCEAN ACCOUNTING TAX CONSULTANTS
Accounting Services for Personal and Small Business
1646 VICTORIA PARK AVE., SUITE 1
PARK PLAZA (BETWEEN LAWRENCE & EGLINTON)
TORONTO, ON. M1R 1P7
TEL: 416-285-6900
FAX: 416-285-4877
Email: OATC@oceantax.ca Web: www.oceantax.ca
Personal & Corporate Income Tax Returns
Complete Accounting Services

மொன்றியல் நகரில்
UTHAYAN உதயன்
விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பலசரக்கு மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria
Montreal, QC
H3W 2R9
514-342-4229
514-865-0519

உதயம் 1265 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday July 3, 2020




# நல்லை ஆதின குருமுதல்வரை சந்தித்து ஆசி பெற்றனர் தமிழ் தேசிய மக்கள் முன்னணி வேட்பாளர்கள்

எதிர்வரும் இலங்கைப் பொது தேர்தலில் போட்டியிடும் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் வேட்பாளர்கள் நல்லை ஆதின குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளை சந்தித்து ஆசி பெற்றுள்ளனர். நல்லூரில் அமைந்துள்ள நல்லை ஞானசம்பந்தர் ஆதினத்தில் இவ்வாறு சந்தித்து ஆசி பெற்றுக்கொண்டுள்ளனர்.

இந்தச் சந்திப்பில் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான தலைவரும் அகில இலங்கை இந்துமா மன்றத்தின் உப தலைவருமான கலாநிதி ஆறு திருமுருகனும் பங்கேற்றார்.தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், தேசிய அமைப்பாளர் சட்டத்தரணி வி.மணிவண்ணன் உள்ளிட்ட வேட்பாளர்கள் குறித்த சந்திப்பில் பங்கேற்றிருந்தனர். .இங்கே காணப்படும் படங்கள் அங்கு எடுக்கப்பட்டவையாகும்.




Life Insurance
Don't think twice
Life Insurance
Critical Illness
Disability
Investments
Group Benefits
RRSP / RESP
INFORCE LIFe Financial Services Inc.
RESP
Registered Education Saving Plans
40% - 20% Goverment Grant
Plus additional
15-10% on us.
Start Saving Early
Ajanthan (Ajay) Thavayogarajah
Insurance and Investments
Call Ajay:
416.704.8074

